558

558

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V 7. நம்:31. 9.8.1934.

m211,N28kN
N34.7.31.
199181

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

THE REGIST

Vol 7.] 1934 ஞு ஆகஸ்ட் மீ 9உ [No. 31

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 481

2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன் தூதுப் படலம். 483

3. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B. A. B.L. 485

4. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 487

5. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 5. களம் 2.)
Goldsmith's—"She stoops to Conquer" 489

6. காலம்—(வாரம்—மாதம்).
வித்வான் K. S. விசுவநாதசாஸ்திரி P.O.L. 492

7. ஸ்ரீதியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஏமனி நெரநம்மு கொந்துமு)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 495

8. கலாநிலயச் சொல்லூட்டம் 3-முடிவு. 496

9. வர்த்தமானம் 496

க லா நி ல ய ம்

கல்சரை யடையும் வகை 8

எல்லை காண்பரிய விக்கல்சரின் நலமெலாம் யாவர்க்கும் ஒல்லைவந் தெய்துமாறு யாதென விதன்மேலதிகஞ் செப்பவேண்டா. எவ்வெவர் குலமும் ஊரும் தேயமும், மற்று உலகப்பொதுவேனும், இருக்கின்றபடி யிருக்கட்டும். அந்தத்திலதனா லாவதுங் கெடுவதுமொன்றுமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் ஆன்மவாழ்க்கையின் உணர்ச்சியெய்திச் செம்மையிற்றமைந்த சிந்தைய ராவரேல், பின் எக்கருமம் எப்பெருமை எந்நன்மை இருமையினு மவர்க் கரியதாகும்! ஆதலின், எவ்வகை யரசியல்முறையேனு மாள்க—ஓட்டுப்பெட்டிக்கும் நமது வீட்டுவாழ்க்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அனைவரும் வறியராயின் ஆக, வணிகவேந்தராயின் ஆகுக—உயர்வுந் தாழ்வும் இன்பமுந் துன்பமும் பொருள்தர வாரா. குலாசார மதாசாரங்களைத் திருத்துவோர் திருத்துக; திருத்தவேண்டாவென்போர் வேண்டற்க--திருந்துவதுங் கெடுவதும் அவ்வாசாரங்களே என்று இருதிறத்தோறும் விவகரிக்கின்றனரன்றி, கூர்ந்து நோக்குங்கால், திருந்துபவர் தாமென்று மகிழ்வாரு மில்லை, கெடுவதுந் தாமென்று கரைவாரு மில்லை. நம்முன்னோர் வகுத்த சாதி வரையறை வேண்டுவோர் வேண்டுக; வேண்டாதார் விடுக; சுயநலக் கருத்துடையான் ஒவ்வொருவனும் அவனவன்வரையில் எந்நாளிலுந் தனித்தனிச் சாதியே. தம் உடல் பொருள் ஆவியைப் பொதுஜனங்கள் பொருட்டு அளிப்போர் அளிக்க—கொடையோ சிறியது, ஏற்றோர் பெற்றபேறு அதனினுஞ் சிறியது. பிறரது உடல்பொரு ளாவிகளைக் கவர்வோரும் கவர்க—இழந்தவர் துன்பத்தையே இருமடங்காகக் கவர்ந்தவர் பெறுகின்றனர். தெய்வமிகழ்ந்து மறுப்பாரும் அஃதே செய்க-இதனாலம்முழுமுதல் மெய்ப்பொருளில்லையென் றிழிவுபட்டொழிந்திடாது. தெய்வமோவுண்டென்னக் கூட்டங் கூடுவோர் கூடுக—தன்னைக் காக்கின்றார் இவரென்று அத்தெய்வம் மனிதருக்கே கடப்பாடுடையதாய் நிலைத்திருக்கவோ நினைத்திலது. இவையெல்லாம் இவ்வுலகவாழ்க்கையாம் கடலினது மேற்பரப்பில் தோன்றித்தோன்றி யடங்குகின்ற அலைகளே யல்லாமல் வேறாகா. இவைகளைப்பற்றி வாய்க்காற்றத் தூற்றுவோர் வன்மைக்கிணங்க ஒவ்வோர் அலை உயரப்பொங்கலாம், அவ்வளவே. நோக்குவோர் கண்களுக்குக் கடலினின்றுகதித்தெழு மொவ்வோர் கல்லோலமும், உலகை இதுதான் இன்றே விழுங்கிக் கொள்ளு மென்னுமாப்போல் தோன்றுமெனினும், எஞ்சுவது ஆரவாரமே. பொங்குவதும் பாய்வதும் புரள்வதும் அயர்ந்துமீள்வதும் ஆவதேதா னவ்வலைகளின் கதி. பாய்ந்த அலை ஓய்ந்து மீளுங்கால் மேல்பாயு மலையைத் தடுக்கின்றது; சிற்சிலபோது தானுமே வரு மலையோடு சேர்ந்து சிறிது புரளினும் புரளலாம்.

பொதுஜனங்களின்பேரால் உலவுகின்ற இயக்கங்கள் யாவும் இவ் வலைகளே போன்றவை. புறவுலகப் பேதைமையால் கலக்கமுற்றியங்கு மிவ்வியக்கங்களுக்கும், தனிமுதற் பொருளே தனக்குச் சாக்ஷியாய் அவரவர் உள்ளந்தோறும் அரசுவீற்றிருக்கும் உண்மைவாழ்விற்கும் உள்ள தொடர்பு, பரவைக்கு மதன்மேல் தோன்றுந் தரங்கத்திற்கு முள்ள தொடர்பின்றி வேறன்று. அலைகள் அல்ல கடல். கடலினது பெருமை அவ்வலைகளில் இல்லை. அகலத்திலும் ஆழத்திலும் கடு

விடத்து அமைதியிலும்,கரையின்றி நிற்கின்ற நிலையிலும், வடவையைத் தடுக்கின்ற முயற்சியிலும், மழையாக வெழும்பி உலகத்தை ஊட்டுவதிலும், இருசுடரும் தன்னிற் பிறந்து தன்னையே சேர்வதிலும், தண்மையிலும், தன்பால் வந்துதோய்ந்தோருக்குப் புண்ணியம் பயப்பதிலும், வாரியின் மாண்பை நாம் காண்கின்றோம். வாழ்வின் உருவகம் கடல். கடலின் பெருமைக்குரியவென் றுரைத்த விக்குணங்களை வாழ்வோடிணங்கவைத் துணர்தல் அருமையன்று. அலைகளின் புரட்சியால் கடலினுள்ளிடம் கலங்குவதில்லை, மற்று உள்ளிடம் கலங்கி யிருத்தலால் இவ்வலைகள் எழுந்தன என்பதற்கும் இல்லை. கடலின் கரையோரத்தில் மேல்பரப்பில் மாத்திரம் தோன்றும் சிறிதினும் சிறிய செய்தி இவ்வலைகள். பொதுஜன இயக்கங்களும்,மன்பதை வாழ்வென்னும் கடலுக்கு அன்னவைகளே. அலைகளால் கடலுக்கு நன்மையுமில்லை தீமையுமில்லை என்னலாவதுபோன்றே இவ்வியக்கங்களால் மானுட வாழ்வு மாண்புறுமென்று உவக்க வேண்டா; மற்றதனால் யாவுங் கெட்டழிந்து போமென்று கையற்றுக் கலங்கவும் வேண்டா. இவ்வலைகளே கடலென்று கருதாதிருப்பின் அது போதும்.

கடவுளின் திருவுள்ளம் இன்னதெனும் உணர்ச்சியுற்று அதற்குத் தகவே உலகம் ஒழுகுமாறு புரிவதே கல்சரின் கண்ணுங் கருத்துமாகும் எனப் பன்முறை முன்னர்ப்பகர்ந்துளோம். அதுவே வாழ்க்கை. அத்தகைய வாழ்க்கையில், முன்செய்த நல்வினையாற் சிலர், வெளிப்படையா யிங்குத் தோன்றுகின்ற சாதனங்களொன்று மின்றியே, தாமாகத் தோய்கின்றனர். இப்புண்ணியமுடைய பெரியோரைக் கல்லா அறவோர் என்றழைக்கலாம்.அப்புண்ணியம் புரிந்திரா ஏனையோர்க் குற்றதுணை சயகல்ச ரல்லால் வேறில்லை. அச்சயகல்சருக்குரிய இயற்கை அம்சங்களாய தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலியன நவையுறாமல் வளர்வதற்கு, இவைகளால் உயர்ந்த சான்றோர் தம் உறவு வேண்டப்படும். இச்சான்றோர் தம்காலத்தினரே யன்றிப் பின்வருவோரெல்லாம் தமதுஉறவை எய்தும்படி மாயாத தம் ஆன்மாவை நூல்களெனும் கலத்தினுல் நிறுவிச் சென்றுளார். அந்நூல்களிலும், கலையொடு கலந்த காவியங்களே மானுட மனத்திற்கு முதலுதவியாய் அமைகின்ற மாண்பை இத் தலையங்கங்களிற் காட்டிவந்துளோம்.

ஆதலின், கலைபொதிந்த நூல்களோ டிடைவிடாமற் பயின்றுவருவதொன்றே கல்சர் நமக்கு எளிதில் கைவருதற்கொத்தமுறையாகும். எந்நிலையிலிருப்போரும் எத்தொழில் செலுத்துவோரும் யாவரும் எந்நாளும் அவரவர் பாஷையில் எழுதியிருக்கிற பெரிய இலக்கியங்களையும், அப்பெரிய இலக்கியங்கள் விளங்குமாறு அவைகளைப்பற்றிக் கல்வியும் கலையின் நுண்ணுணர்வுமுடைய அறிஞர்களால்எழுதப்பெறுகின்ற கட்டுரைகளையும், ஓதிவர வேண்டுமென்பதே இவ்வாழ்க்கையில் விரும்புதற்கு இயன்றது. இதற்கென்று ஒன்றுந் தனி முறை வேண்டா. ஆராய்ச்சி யொன்றும் செய்ய வேண்டா. படுக்கையறைமுதல் உண்ணுமிடம் வரை நம் மனைகளில் புத்தகங்கள் எங்கும் பரவியிருக்கட்டும். கண்ணுக்கெதிர் இவை இருந்தாலே கருத்துட்கொள்ளும் தன்மை சான்றது. நினைத்தபோது கைக்கு அகப்பட்ட புத்தகத்தை எடுத்துத் திறந்த விடத்தில் படித்துப்படித்து வைக்கின்ற பழக்கம் இருந்தாலும் போதும். மெள்ளமெள்ள நம் மனம் தொடர்ச்சிக்கு அவாவி அதனை முடிவுற முழுமையாய் அமைத்துக் கொள்ளும். எடுத்த புத்தகத்தைப் படித்துணர்தற்கு வேண்டிய பாஷைப்பயிற்சி பெறுவது, விருப்ப முண்டேல், பெரியதொரு கருமமன்று. தெரிந்தவரையில் படித்துவந்தாலுமேபயிற்சியும் மேன்மேல் தானகவே வளர்ந்து கொள்ளும்.

ஆதலின் ஆங்கில மறிந்தோர், இனித் தமிழுங் கற்கப் பொழுதுபெறு ராயினும், அப்பாஷைஇலக்கியங்களை எந்நாளும் எடுத்தெடுத்து ஓதிவரட்டும். ஷேக்ஸ்பியர், கார்லைல், எமர்ஸன், ஸ்காட், டென்னிஸன், ப்ரௌனிங், ஜான்ஸன், முதலிய பல மேன்மையோர் வரைந்துள நூல்களை நூறுமுறை முன்னரே ஓதியுளரேனும், மேலும் பன்முறை ஓதினரேனு மிகையன்று. தமிழே அறிந்துளோரும் அவ்வாறே தம்கம்பரையும் வள்ளுவரையும் சிலப்பதிகாரத்தையும் அகநானூறு புறநானூறு அனைய நூல்களையுங் கைவிட் டகற்றுரெனின் பின் பிறிதொரு குறையிலை. பொன்மலர் நாற்றமுடைத்தாயதுபோல் இருபாடையும்பயின்றோர்க்கு இருமடங்கு விருந்துளது. இவைகளோடு வடமொழியும் பயின்று, காளிதாஸனையும் வால்மீகியையும் மற்றுளபெரும்புலவரையும் தமக்குஅண்மிய ராக்கிக் கொள்வாராயின் நறுமணமுடைய பொன்மலரில் தேனுஞ் சுரந்தது போலாகும். ஒன்றுமாத்திரம்நாமிங்கு 'எச்சரிக்கை' செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம். அரும்பெரும் இலக்கியங்களைப் படிக்குங்கால் அதனழகில் அகங்குழைந்து உருகவேண்டுமேயல்லாமல்,வேறெவ்வகைக் கருத்துமிடைபுகுந்து,பண்டைக் காலப் பழக்க வழக்கங்கள்,முதலியன ஆராய்வதென்கின்ற படுகுழியில் விழுந்திடாமல் காத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஆராய்ச்சியில் சென்ற ஒருவர், பண்டைத்தமிழ் நாடகநூல்கள் மறைந்து ஒழிந்ததற்குச் சங்கப்புலவர்களின் பொறாமைதான் காரணம் என்று கூறினர்.அந் நாடகநூல்களின்முன் தம் இயற்றமிழ்நூல்கள் பீடுபெறுவென்று, அவை தலையெடுக்க வொட்டாமல் அழுத்தி விட்டனராம். கற்றுரைக்கற்றோரே காமுற்றுப் போற்றுவார் என்பதுபோக,இவ்வாராய்ச்சியால் சங்கப்புலவர்களுக்கு அழுக்காறே ஆக்கிவைக்க நேர்கின்றது. தற்காலம் தமிழில் நடைபெறுகின்ற ஆராய்ச்சியால் நங்குல முன்னையோர் பெருமைகளை நாம் நம்முடைமையாய்க் கொள்வதற்கெதிராய் நமது சிறுமையையே அவர் தலையில்சுமத்துகிற விபரீதத்திற்கு இடந்தருபவராகின்றோம்.இருக்கின்ற நூல்களை அனுபவித்தால் போதும்; இல்லாத நூல்களை ஆராயவேண்டா.

தம்வரையில் செய்துகொள்ள வேண்டியது இவ்விலக்கியப்பயிற்சி யென்பதாயின், மற்றவர் நலத்தை விரும்புவோரும் அவர்களுக்குச்செய்துவைக்கவேண்டியதும் இதுவே என்பது வெளிப்படை. இதற்குப் பாடசாலைகளையும், கல்விக் கழகங்களையும், அரசாங்கக் கல்வி அதிகாரிகளையும் எதிர்பார்த்து நிற்கவேண்டிய அவசியமில்லை. அவரவர் தாம் அனுபவிப்பதைத் தம்மைச்சுற்றியுள்ள ஒருவர் இருவர் பதின்மர் அநுபவிக்கும்படி ஒழிந்த நேரங்களில்— வேண்டுமெனின் ஒழிந்த நேரம் வாய்க்காமற் போகாது—செய்துவருவதே சாலும். வேறோர் புத்திமதி புகட்டு[illegible] வாழ்க்கைவகை வகுத்து வைக்க வேண்டா, ஆசாரங்களைச் சீர்திருத்தித் தரவேண்டா—செல்வமுந்தேடி வைக்க வேண்டா—தாமும் ஓர் தொண்டு புரிவதாக எண்ணிக்கொள்ளவும் வேண்டா. தனிமுதற் பரம்பொருள் அருளின் உரிமை உற்றவராய் வாழ்வோம். தீமை நலிந்தது. சிறுமாநுடர் செய்கின்றஆட்சி அகன்று அருட்பெருங்கடவுள்புரிதருபேரருளாட்சியின் மாட்சி இவ்வுலகிற் கைகூடக் கண்டவ ராயினேமே!

m211,N28KN
13.4.7.21
199181

தமிழ்ப்பாடம் 131.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[469-வது பக்கத் தொடர்ச்சி]

ஒளிமுக மிழப்பவந் துற்ற நாணமீக்
கிளிர்தர வில்லெனக் கிளக்கு மூர்ச்சனை
தெளிதர முகத்தினிற் றெளித்தற் கன்றுகொ
னளிபுனல் பொருளொடு நல்கு கின்றதே. 19.

(உரை):—(யாசகன் ஒருவன்) முகம்-தன்னுடைய முகமானது, ஒளி இழப்ப - ஒளியிழக்கும்படி, வந்து (பிறரிடத்து) வந்து, உற்ற - உண்டான, நாணம் - கூச்சம், மீ கிளிர்தர - மிகவும் அதிகமாக, இல் என- "என்னிடத்தில் இது "இல்லை நீ தரவேண்டும்' என்று, கிளக்கும் - சொல்கின்றதால் அடைந்த, மூர்ச்சனை - மூர்ச்சையானது, தெளிதர - தெளியும்படி, முகத்தினில் - அவனது முகத்தில், தெளித்தற்கு அன்றுகொல் - தெளிப்பதற்கே அன்றோ, பொருளொடு- தானமாகக் கொடுக்கின்ற பொருளுடன், நளி புனல்- குளிர்ந்த நீரையும், நல்குகின்றது - எப்பொழுதும் கொடுக்கலாகின்றது. (என்று நளன் தன்னுள் சிந்தித்துக்கொண்டான்.)

விரிவுரை:–இல்லாத கொடுமையால் ஒருவன் மற்றொருவன்பால் இரக்க வருகின்றபோதே அவன் முகம்செத்து ஒளியெல்லாம் மழுங்கிவிடுகின்றது. பிறகு மிகுந்த வெட்கத்தோடு, "ஐய, எனக்கு இது இல்லை, நீ தருதல்வேண்டும்" என்று சொல்லி முடிவதற்குள் மூர்ச்சனையு மடைந்துவிடுகின்றான். மூர்ச்சனையடைந்துகிடக்கின்ற அவனுக்கு அவன் கேட்ட பொருளை எவ்வாறு கொடுப்பது? ஆகையால் முதலில் அவன் மூர்ச்சையைத் தெளிவிக்கவேண்டும்.மூர்ச்சைதெளிய முகத்தில் குளிர்நீரைத் தெளிப்பர். ஆகையாற்றான் எப்பொழுதும் தானப்பொருளுடன் நீரைச்சேர்த்துத் தருகின்றனர், என நளன் இங்கு ஒரு புதியகாரணம் கற்பிக்கின்றான். "இல்லை, எனக்குஈ" என்று சொல்ல வைத்து அவர்தம் மானத்தைப் போக்காமல் குறிப்பு அறிந்து கொடுத்துவிடுவதே சிறப்புடைத்து என்பது இதன் கருத்து.

தானப்பொருளைப் புனலொடு வழங்கவேண்டுமென்பது ஓர் விதியாயிருக்க இதனில் நளன் தன் குறிப்பாக வேறொன்று அமைத்துக் கூறுவதால் இது தற்குறிப்பேற்றவணி. தற்குறிப் பேற்றவணியின் வகைகளையும் அவைகளின் இலக்கணம் முதலியவைகளையும் முன்னர் (5-484,545) விரிவாக உரைத்திருக்கின்றோம். நீரொடு பொருளை நல்குவதற்குக் காரணம் இதுவோ என்று காரணசம்பந்தம் கற்பிப்பதால் இது ஏதுத்தற்குறிப்பேற்ற அணியாகவேண்டும். அல்லது மூர்ச்சனை தெளியவேண்டும் என்னும் பயனைக் கருதியே நீரும் நல்கப்படுகின்றது என்பது குறிப்பென்றுகொண்டால் இதனைப் பயன்தற்குறிப்பேற்ற அணி என்றும் கொள்ளலாம். ஏதுவேனும் பயனேனும் இரண்டும் குறிப்பேயன்றிமெய்யில்லை. ஆனல், இந்தச் சந்தேகத்திற்கு இடம்தரும்படி பொருளொடு நீரை நல்குகின்றதாகிய நிகழ்ச்சியுளது. ஆகையால் இதனை உளபுலவேதுத்தற்குறிப்பேற்ற அணியென்றேனும்,அல்லது உளபுலப் பயன்தற்குறிப்பேற்ற அணி யென்றேனும் கொள்ளலாம்.

குறிப்பு:—நளி + புனல். நளிபுனல் — இகரவீற்று நளியென்னும் உரிச்சொல்லின்பின் வருமொழி முதல் வல்லினமெய் மிகவில்லை (7-376).

ஐந்தரு நீழலி னரசு வைகிய
விந்திரன் முதலினோ ரீகென் றென்னுழை
வந்துயர் பெரும்புகழ் வழங்கி னரிவர்
சிந்தனை மகிழ்வுற வென்கொல் செய்வதே. 20.

(உரை):—ஐந்தரு நீழலில்-(தேவலோகத்திலுள்ள அரிசந்தனம் கற்பகம் சந்தானம் பாரிஜாதம் மந்தாரம் என்னும் ஐந்து தருக்களின் நிழலில், அரசு வைகிய - அரசு வீற்றிருக்கின்ற, இந்திரன் முதலினோர்- இந்திரன் முதலிய தேவர்கள், என் உழை வந்து - என்னிடத்தில் வந்து, ஈக என்று - ஒன்று 'கொடு' என்று கேட்டதால், உயர் பெரும்புகழ் -தம்முடைய உயர்ந்த பெரிய புகழை, வழங்கினர் - கொடுத்து இழந்துவிட்டனர் (இவ்வாறு இழந்து வருந்துகின்ற) இவர் - இவர்களது, சிந்தனை - மனமானது, மகிழ்வு உற - மகிழ்வடையும் வண்ணம், என்கொல் செய்வதே - யான் இப்பொழுது செய்யவேண்டியது எதுவெனத் தெரியவில்லையே (என்று நளன் தன்னுள் எண்ணி அயர்கின்றான்).

விரிவுரை:—"கேட்டவர்களுக்குக்கேட்டவைகளையெல்லாம் கொடுக்கவல்ல கற்பகத்தருவிற்கு இறைவனாகிய இந்திரனே ஒரு குறையுற்று அது என்னாலே தீரவேண்டுவதாயின், அதனை யான் எங்ஙனம் உணர்வேன், ஆற்றுவேன்'' என்று நளன் நைந்தான் என்பது இச்செய்யுளின் கருத்து. "இரவின் இளிவந்தது இல்லை'' யாகையால் "ஈக'' என்ற சொல்லைச் சொல்லி இந்திரன் தனக்குரிய புகழையெல்லாம் இழந்ததால் மிகவும் வருந்துவா னென்றும், அவ் வருத்தத்தைத் தான் ஆற்றுவது கடன் என்றும், பெருங் குணநலமுடைய நளன் நினைக்கின்றான். அல்லது"என்னிடத்தில் வந்து ஈக என்று கேட்டதால் எனக்கு அவர் உயர்ந்த புகழைக் கொடுத்தனர்; இதற்கு ஈடாக நான் அவர்களுக்குக் கொடுக்கக்கூடியதும் ஒன்று இருக்க இயலுமோ'' வென்ன நினைத்தானென்றுங் கொள்ளலாம். இரவச்சத்தையுங் கடந்து யாசிக்குமொருவன் தான் பெறும் பொருளினும் மிகப்பெரிய புகழையும் ஈத்துவக்கும்இன்பத்தையும் வள்ளலுக்கு நல்குகின்றான். "இரத்தலும்ஈதலேபோலும் கரத்தல் கனவினுந் தேற்றுதார் மாட்டு" என்ற குறளினது கருத்தை ஒருவாறு உட்கொண்டுளது இச்செய்யுள்.

என்னருந் தவத்தினன் றெனது தொல்குல
முன்னையோ ரருந்தவ முயன்ற பான்மையாற்
பொன்னகர் துறந்துநீர் போதப் பெற்றனன்
சொன்னவை மறக்கிலன் சொல்க வென்றனன். 21

(உரை):—"என் - யான் ஒருவன் செய்த, அரும் தவத்தின் அன்று - அரிய தவத்தின் பயன் அன்று; எனது தொல்குல முன்னையோர்-என்னுடையபழைய குலத்தில் எனக்குமுன்தோன்றியுள்ளபெரியோர்கள், அரும்தவம்முயன்ற பான்மையால்-செயற்கரிய தவங்களைச்செய்து முடித்திருத்தலால் அந்தத்தவங்களின் தொகுதிப்பயனுய், பொன்நகர் துறந்து நீர் போதப் பெற்றனன் - பொன்னுலகத்தை விட்டு நீங்கி இங்கு யான் காணும்படி நீங்கள் வரும் பாக்கியத்தைப் பெற்றேன். சொன்னவை மறக்கிலன் - நீங்கள் எதுகேட்டாலும் மறுக்காமல் தருவேன், சொல்க - அதனைச் சொல்லுங்கள்" என்றனன்- என்று நளன் தேவர்களை நோக்கிக் கூறினுன்.

விரிவுரை:—தேவர்களுக்கு முகமன்கூறிப் பின் அவர்கள் கேட்டதைக்கொடுக்கத் தான் இசைவதாக வாக்களிக்கின்றுன் நளன். தான் ஒருவன் செய்துள தவம் எத்தனைப் பெரியதேயாயினும் தேவர்கள் இப் பூமிக்குவந்து தன்முன் நிற்கவல்லபயனை அளித்தற்கு அது போதாதென்றும், ஆதலால் தன்குலத்தில் முன் வந்துள்ள வேந்தர்களெல்லாரும் செய்த தவங்களின் பயனெலாந் திரண்டு இந்தப் பாக்கியத்தைத் தனக்கு அளித்ததென்றும், முகமன் கூறியவாறுகும்.

ஆங்கது கேட்டவா னரசன் பொற்பினல்
வீங்குதோண் மாரனை வென்ற நீயலால்
யாங்குள ரவன்றொடுத் தெய்யு மின்னறுப்
பூங்கணை யால்வருந் துயரம் போக்குவார். 22.

(உரை) ஆங்கு அதுகேட்ட வான் அரசன் - அவ்வண்ணம் நளன் சொன்ன அதனைக் கேட்ட வானலோகத்திற்கு அரசனுகிய இந்திரன் (நளனைப் பார்த்து), "வீங்குதோள் மாரனை-பருத்திருக்கின்ற தோள்களையுடைய மன்மதனை, பொற்பினல் - அழகினல், வென்ற - ஜயித்திருக்கின்ற, நீ அலால் - உன்னையே தவிர,—அவன் தொடுத்து எய்யும்- அந்த மன்மதன் தொடுத்து எய்கின்ற, இன் நறுப் பூங்கணையால் - இனிய தேன் உடைய புஷ்பபாணங்களால், வரும் - உண்டாகின்ற, துயரம் போக்குவார் - துயரத்தைப் போக்க வல்லவர், யாங்கு உளர் - எங்கு இருக்கின்றனர்? (எங்கும் இல்லை)- என்று மேலுஞ் சொல்லுவான்.

விரிவுரை:—பின், தமயந்தியின்பால் தமக்காகத் தூதுபோகவேண்டும், என்று வேண்டுவதற்கு இது பாயிரம் ஆகின்றது. "மன்மதன் வருத்துகின்றுன்; அவனைவெல்ல எங்களால் இயலவில்லை; நீயோ மன்மதனை அழகில் வென்றவனுயிருக்கின்றுய். இப்பொழுதும் வெல்லக்கூடியவன் நீ யொருவனே ஆதல்வேண்டும்; உன் தந்தை அவுணரை வென்று எங்களைக் காத்ததுபோல் நீயும் அகங்கனை வென்று எங்களைக் காத்தல் வேண்டும்," என்னுங் குறிப்புடைத்து இந்திரனது இவ்வாசகம். இதுவன்றி இன்னுமொரு நயமும் இந்தச் செய்யுளில் பொதிந்திருக்கின்றது. "தமயந்தியின்பால் உன்காதலை மதனன் தூண்டுகின்றுனயின், எங்கள்பொருட்டாக நீ அந்தக் காதலை இப்பொழுது துறக்கவேண்டியவனு யிருக்கின்றுய். அதற்கு நீ மன்மதனைவென்று விலக்கிவிடுதல் அவசியம். மன்மதனை வெல்லல், 'ஊக்கம் உள்ளத்து உடைய முனிவரால் காக்கலா அது காமன்கை வில்" என்றபடி ஏனையோருக்கு இயலாத தொன்றுயினும்,முன்னரே ஒருமுறை பொற்பினல் வென்றுளாயாதலால் மீண்டும் இப்பொழுது அவனை நீ காமத்திலும் வென்று கடப்பது எளியதாகலாம்" என இந்திரன் முன்னறிவு புகுத்தினன் போலும்.

குறிப்பு:—போக்குவார் யாருளர், என்று முடித்துக்கொள்க. போக்குவார், இங்கு வினைமுற்றன்று, வினையாலணையும் பெயர், போக்குகின்றவர் என்பது பொருள் (5-263).

பூ+கணை=பூங்கணை:-இதனை, பூவால் ஆகிய கணை என விரித்து மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையென்றேனும் அல்லது, பூவாகியகணை எனவிரித்துப் பண்புத்தொகையென்றேனுங்கொள்ளலாம். இவ்விருதொடரினும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுதல் வேண்டும். ஆயின் பூக்கணை, என்று ஆகும். ஆனல் பூ என்னுஞ் சொல் நிலைமொழியாயிருக்குமானல், வல்லினமெய் மிகுவதோடு சில தொடர்களில் அவ்வல்லெழுத்திற் கினமான மெல்லெழுத்தும் மிகலாம். அந்தத் தொடர்கள் பின் வருவன:—

1. உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்.
   பூ+பொழில்=பூம்பொழில், பூப்பொழில் (பூவை உடைய பொழில்)2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. பூ+தாமம்=பூந்தாமம், பூத்தாமம் (பூவினல் கட்டிய தாமம்). 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. பூ+தேன்=பூந்தேன், பூத்தேன் (பூவில் உள்ள தேன்). 7-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.
2. ஆறும் வேற்றுமைத் தொகை.
   பூ+தாள்=பூந்தாள், பூத்தாள் (பூவினுடைய தாள்).
3. பண்புத்தொகை.
   பூ+குயில்=பூங்குயில், பூக்குயில் (பூவாகிய குயில்—இங்குப் பூ என்பதற்கு,அழகு என்பது பொருள்).
   பூ+சாமரை=பூஞ்சாமரை, பூச்சாமரை.
4. உவமத்தொகை.
   பூ+கை=பூங்கை, பூக்கை (பூப்போன்ற கை).
   பூ+தாள்=பூந்தாள், பூத்தாள் (பூப்போன்ற தாள். தாள் - பாதம்)

இந் நான்கு தொடர்களிலும் வல்லினம் மிகலாமாயினும், மெல்லினம் மிகுந்து புணர்வதே சிறப்புடைத்து. மற்றத்தொடர்களில் வருமொழி முதல் வல்லினமெய்யேதான் மிகும்; அதற்கினமான மெல்லினமெய் மிகுதல் கூடாது.

பூ+பறித்தான்=பூப்பறித்தான் (இரண்டாம் வேற்றுமைத் தொகை).
பூ+சொரிந்தது=பூச்சொரிந்தது (எழுவாய்த் தொடர்).
பூ+காய்=பூகாய், என உம்மைத் தொகையில் ஓரெழுத்தும் மிகாமல் புணரும்.

இவ்விதம், மா என்னும் மரப்பெயர்க்குப்பின்னும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாமல் அதற்கினமான மெல்லினமெய்யே, மாங்காய், மாம்பழம், மாந்தளிர், மாஞ்சோலை, என மிகுந்து புணரும்.

வெயில்விரி மணிமுடி வீம னல்கிய
மயிலியல் மதர்விழி வளைக்கை மங்கைபாற்
செயிரறு தூதுநீ செல்ல வேண்டுமென்
றுயிரிரப் போரினு முளையக் கூறினன். 23.

(உரை) வெயில் - ஒளியை, விரி - விரிக்கின்ற, மணி - மணிகள் இழைத்த, முடி - கிரீடத்தை அணிந்த, வீமன் - வீமராஜன், நல்கிய - பெற்ற, மயில் இயல் - மயில்போன்ற சாயலையும், மதர்விழி - களித்த கண்களையும்,வளைக்கை-வளைகளையணிந்தகைகளையும் உடைய, மங்கைபால் - பெண்ணுகிய தமயந்தியின் இடத்து, நீ - நீ, செயிர் அறு - வஞ்சனையற்ற, தூது செல்லவேண்டும்-தூது எமக்காகப் போகவேண்டும்," என்று - என்று, உயிர் இரப்போரினும் - உயிரையே கொடு என்று கேட்பவர்களைக் காட்டிலும், உளைய - வருத்தம் உண்டாகும்படி, கூறினன் - இந்திரன் கூறினன்.

விரிவுரை:—தேவர் தன்பால் கேட்கக்கூடியவைகளில் தன்னுயிரிலும் உயர்ந்தது வேறென்று மிருத்தல் இயலாது என்ற நினைவில் "பெறற்கரும் ஆவியும் பெட்பின் ஈகுவன்" என உயர்வுசிறப்பு உம்மையோடு நளன் நிச்சயஞ்செய்தனன். தனது உயிரிலும் அருமையாய தமயந்தியையே கேட்பாரெனக் கனவிலும் எண்ணியிரான். ஆதலின் இந்திரன்,உயிர் இரப்போரினும் உளையக் கூறினன், என்றது தக்கதாயது.

நைடதத்தின்படி, மாபெருங் காதலோடு தனக்கே தமயந்தி மாலையிட நிச்சயித்து இருப்பதை அன்னப் பறவையின் வாயால் அறிந்து சென்றவன் நளன். நளவெண்பாவிலோ, கருமத்தை இனிதின் முடித்துவந்த உவகையால் அன்னம் சிறிதிறுமாந்து யாதும் உரை வழங்காதிருக்க அதற்கு ஆற்றுமல் நளன் மூர்ச்சையாகிவிழுந்து பிறகு கண்விழிப்பதற்குமுன், ஏதோ விபரிதம் நேர்ந்துவிட்டதென்னும் பயத்தினல் அன்னம் பறந்தோடிவிடவே, தமயந்தி தன்னைக் காதலித்தாளோ அல்லளோ என்பதறியாமல் மற்றெல்லாரையும்போல் தானும் ஒருவனுய் அச் சுயம்வரத்திற்குச் சென்றவனுகின்றுன். (5-265, 287). ஆகையினல், நளவெண்பாவைக் காட்டிலும் இந்த நைடதத்தில், தனக்கென்று உரிமையாய காதலைக் கைகடக்கும்படி விடவேண்டி நேர்ந்த நளனது நிலைமை பின்னுமொரு பங்கு கொடியது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6ம் பத்து. 9ம் தசகம்.

[472-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்.

பாயோ ரடிவைத் ததன்கீழ்ப் பரவை நிலமெல்லாந்
தாயோ ரடியா லெல்லா வுலகுந் தடவந்த
மாயோ னுன்னைக் காண்பான் வருந்தி யெனைநாளுந்
தீயோடுடன்சேர் மெழுகா யுலகிற் றிரிவேனே.

பதக் குறிப்புக்கள்:-பாய்-பரப்பி,பாவி,விஸ்தரித்து; பரவை - சமுத்திரம், தாய்-தாவி-தாண்டி அதாவது அளந்து; ஓர் அடியால் - மற்றொரு திருவடியால், தடவந்த - மறைந்திருப்பதைத்தேடுதல்நிமித்தம் தடவிய என்றுமாம். மாயோன் எட்டாம் வேற்றுமை. எனைநாளும் அளவிடக்கூடாத எத்தனை நாள்களும்-திரிவேனே - எத்தனை காலத்தை வீணுகக் கழிப்பேனே? இவர் உலகருக்கு, "திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்துய்மினே" என்றல்லவோ கற்பிக்கிறவர். அவன் திருவடிகளைப்பூண்டு தொண்டு செய்யவேண்டுமென்பதல்லவோ இவருடைய மனோரதம். அது கிடைக்காத வரையில் காலம் "பெற"வில்லை. அதாவதுபயன்பெறவில்லை,ஸபலமாகவில்லை யென்று அன்றோ இவர் திருவுள்ளமிருக்கும் நிலை. ஸேவைகாணுமல் தீயிலகப்பட்ட மெழுகுபோல் மனமுருகிப் பதைக்கிறதென்கிறூர்."எத்தனை நாளும்" என்பதால் வீணுக வேதனைப்பட்டுக் கழிந்தகாலம் எவ்வளவோ வாயிற்று; எதிர்காலத்திலும் ஆயுள் முடியும்வரையில் தொடருமோ என்று பயப்படுகிறபடி. கண்ணுல் காணவேணுமென்று ஆசையால் பக்தியால் சிந்திப்பது ஒழிந்துபோகின்றது. ஆகையால் ஸேவையுமில்லாமல் சிந்திப்பதுமழிந்துவிடுகிறது. காலமெல்லாம் நலிவே அநுபவம்.

குறிப்பு:—இப்பாசுரத்துக்கும் மேலே சிற்சில பாசுரங்களுக்கும் உரையிடுவதில் பூர்வீகர்களை யநுஸரித்தவர் வாக்கியங்களை எடுத்தெழுதி அவைகளை விளக்குவதே நம் கடமையாகக் கொண்டு இருக்கின்றோம். அவற்றில் முதல் ஆறுயிரப்படி உரை—"என்னையுன் திருவடிகளில் சேர்க்கவேணுமென்று உலகங்களைத் திருவிக்கிரமனு யளந்தவொரு வியாஜத்தாலே (அதாவது அதுவேகாரணம்போல் விவேகமில்லாதஉலகரறியும்படி விலையில்லாதொரு ரத்நத்தைக் கெடுத்துக் கெட்டுப்போக்கி)தேடுவாரைப்போலே பெரிய வருத்தத்தோடு உன் திருவடியினல் என்னைத் தேடிக்கொண்டு திரிந்தவுன்னை நான் காணவேண்டுமென் றாசைப்பட்டு, "எங்குற்றா யெம்பெருமானென்று" வருந்தித் தேடிக் காணப்பெறுதே சோகம் (மனவருத்தம்) என்கிற தீபாலே தீயோ டுடன்சேர் மெழுகுபோல் வேவுபடுகிறவனு யிவ்வுலகத்திலே நானுள்ளதனையும் திரியுமத்தனையோ வென்கிறூர்.

குறிப்புக்கள்:—பற்பல தடவைகளில், திருவிக்ரம அவதாரம் பகவானெடுத்தது உலகுக்கெல்லாம் தம் திருப்பாதங்களே மோக்ஷமடைய மார்க்கமென்றும், அவையே சேர்விடமென்றும் கற்பிக்கவென்பதே ஆழ்வாரின் நோக்கமென்று எழுதியுள்ளோம். இங்கு ஆழ்வாரின் சிரஸைப் பகவான் பூமிகளெல்லாமளந்த அப்பொழுது தம் திருவடியால் தேடிப் பார்த்தான். அதன்மேல் திருவடிகளைச் சேர்ப்பிக்கவேணுமென்ற ஆதரவுபற்றி இங்ஙனம்அவன் தேடினனென்று திருவுள்ளமாகக் கற்பனை. இக்கற்பனைக்குப் பாசுரத்தில் "தடவந்த" என்ற பதம். பிரயாஸப்பட்டு அதாவது அவன் தேடித் தெரிந்துகொள்ள முயன்றுனேஎன்று ஆழ்வார் கேட்பது நான் உம்மைக் காண ஆர்ஹனென்று திருவுள்ளமோ - நான் எவ்வளவு வருந்திக் கூப்பிட்டாலும் அதினல் பிரஸாதம் தா மனமில்லையோ? இப்படிக்காயின் உம் திருவடிகள் லோகங்களை

அளந்தபோது என்னை ஏன் தேடித்தடவியது? "வருந்தி" என்ற பதமும் மற்றொரு கமகம். நீர் அந்நாள் வருந்தினீர், நானும் இந்நாள் பயன்பெறக்கடவனாயிருந்தும் வருந்துகின்றேனென்று பின்னை உரைகாரர்கள் இதை ரஸமாய் விளக்குவதைக் குறிப்போம்.

I ஆசான் நம்பிள்ளை உரையை வடக்குத் திருவீதிப்பிள்ளை பாகுபாடு படுத்திய ஈடு என்று பேர்வழங்கும் சிறப்புரை இரண்டு பக்ஷமாய் அந்வயிப்பதில் இரண்டாம்பக்ஷ ஈடு.

II "அன்றியே (ஆழ்வார்) காணுகைக்குத் தாம் அயோக்கியரென்று உபேக்ஷித்தாரை நினைத்து யோக்கியாயோக்கியதை பாராதே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்தாய்? உன்னாலே இழக்கப்படுவாரும் உண்டோ? என்கிறார் என்று ஆகவுமாம்."

III. உன்னைக் காண்பான் வருந்தி என்னளவில் வந்தவாறேஎன்னை இரப்பவனாக்குகிறாயோ? அத்தலை இத்தலையாயிற்றோ?

IV. இருபத்துநாலாயிரப்படி- இதுவும் ஈடுபோல் "நம்பிள்ளை" என்ற பேராசிரியர் உரையைப் பெரியவாச்சான்பிள்ளை பட்டோலைப்படுத்தியது.

உன்னைக்காண்பான் வருந்தி-என்னைக்கிட்டுகைக்கு வருந்தித் திரிந்த உன்னைக் காணவேணுமென்று நான் வருந்துவது அத்தலை இத்தலையாயிற்றோ?"

V. இருபத்து நாலாயிரப்படி யுரையும் ஈட்டில் குறித்த இரண்டாம் பக்ஷத்தையே அதே வாக்கியத்தினாலேயே ஆமோதிப்பது அறியத்தக்கது.

VI. ஈடு உரையில் முதல் பக்ஷம்.

(A) ஈடு (பகவானின் திருவாக்கு) "உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம் - அதில் ஒரு குறை இல்லை.

(B) "ஆனாலும் பிரயோஜனம் உம்முடையதானபின்பு நீரும் சில யத்நம் பண்ணவேண்டும் காணும்".

(C) (ஆழ்வாரின் மறுமொழி) "இந்த மரியாதை என்று துடங்கிக் காட்டிற்று"என்கிறார். காட்டிற்று-ஏற்படுத்தியது - திருவிக்கிரமாவதாரம் வரையிலிது கிடையாதே?மேல்குறித்த அடுத்த ஒன்பதாம்பாசுரத்தில் ஆழ்வார் திருவாய்மொழி "கூவிக் கொள்ளுங் காலம் இன்னம் குறுகாதோ"-"உம்மை அழைத்துக் கொள்ளுங்காலம் வந்தால் அபேக்ஷிதம் செய்கின்றோனென்று பகவான் திருவாக்குக் கொடுத்ததாகத் தோற்றுகிறபடியால் இவ்வுரை ஈட்டின் எடுப்பு.

மேல்குறித்த B - இப்பாசுரத்தின் இறுதியிலும் அடுத்த 7-ம் பாசுரத்தின் முதலிலும் "திரிவேனோ" என்ற அப்பதமும், "திரியும்"-"வர்த்தமான தெசையில் உலகமரியாதையாய் நடைபெறுகிற" என்ற பதமும் உலகத்தார் ஸாதாரணமாய்க் கருமயோகமியற்றிப் பகவானை அடையவில்லையா? நீரும் அதுபோல் ஒரு கருமஞ் செய்து உஜ்ஜீவிக்கலாகாதோ விருதாவாகக் காலத்தைச்செல்லவிட்டுப் பெரும் நசையால் இழந்து படுவானே! என்று தோற்றுவிக்கிறபடியால் இக்கருத்தை முன் கூட்டியே ஈட்டினுரை, (B) உரைப்பதை அறியவேண்டும்.

இந்த முதல் பக்ஷத்தின் அந்வயத்தை உறுதிப்படுத்தற்கு ஈடு மேலும் "திருவிக்கிரம அவதாரத்தில் சேதநர் தலைகளிலே திருவடியை வைக்கின்றபோது அவர்கள் எத்த ஸாதநாநுஷ்டாநம் செய்து பிரயாஸப்பட்டார்கள். வஸிஷ்ட சண்டாள விபாகம் பார்க்காதே வெறும் கிருபையாலே செய்தருளினாய்; அத்தனையன்றோ?"

VII:—இருபத்துநாலாயிரப்படி - குறிப்புக்கள்.

(a) தீயோடு மெழுக்கு வெளிக்கலவை இல்லாமல் மனதின் அநுபவம் மாத்திரம் உருக்குகிறது- வலிப்பதுபோல் தோன்றுகிறது.

(b) தடவந்த- தடவின சேதநர்கள் தலையில் திருப்பாதம் படவே உஜ்ஜீவிக்கும்படி யிருக்கை.

VIII:-இப்பாசுரத்துக்குச் சிறிது பொருத்தமும் அடுத்த பாசுரத்துக்கு ஒரு அவதாரிகை போலவும் ஆகும்படி ஈட்டுரை வரைந்திருப்பதை இங்கே எடுத்தெழுதுவோம்—"உலகிற் றிரிவேனோ" என்கின்ற "உரை(யால்)ப்பாலுண்டான ஸ்வாதந்தரியம் உம்முடையதலையில் கிடந்ததே" என்ன, ஸாதனமும் ஸாதகரும், உம் மதீனமானபின்பு (நீர் முழுவதும் தலைக்கட்டக் கடமைப்பட்டவராயிருக்க) இவ்வாறும்மை எனக்கு ஸ்வரூபமாக அந்வயிக்கும் இத்தனையன்றோ என்கிறாராகவுமாம்.

IX:—மேல் இருபத்துநாலாபிரப்படி-"அன்றியே பேறு உம்முடையதானபின்பு நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங் காணுமென்ன ஸர்வமும் உன்னதீனமாயிருக்க அதற்குப் புறம்பே நான் என்னகாரியம் செய்கைக்கு என்கிறாராகவும்.

விசேஷக் குறிப்பு:—ஆகவே பேராசாரியரான நம்பிள்ளை காலக்ஷேபத்தில் ஈட்டிலும் இருபத்து நாலாயிரப்படியிலும் காணுகிறபடி மேன்மையான ஆறாயிரப்படி உரையையே அநுசரித்துப் பாடம் ஓதினார் என்பது அறியத்தக்கது.

மேல்கண்டபடி திருவிக்ரமாவதாரத்தில் பகவான் ஆழ்வார்சிரசு எங்கேஇருக்கின்றதென்று தேடித்தடவினதாகக் கல்பித்திருப்பது வெறும் காவிய கல்பனை மாத்திரமா? ஸர்வஞ்ஞன் தடவினால் அத் திசையில் ஆழ்வார்தலையில் திருவடியை சேர்த்தாரா,இல்லையா? இந்த ஆழ்வார் பலிச்சக்கரவர்த்தியின் காலத்திலே தேவதையாயிருந்தாரா, மனிதனாயவதரித்து இருந்தாரா? இவை முதலான கேள்விகள் பல எழுவது இயல்பு. இங்கு ஆழ்வார் உரைக்கவந்தது பின்னர்,திருவாய்மொழி இறுதியில் தம் சரீரஸம்பந்தத்தை யறுத்துத் தேசவிசேஷத்திலே கொண்டுபோய்ப் பேராநந்தம் தன்னுடனநுபவிக்க ஏற்படுத்திய சீரியநிலையைப்பற்றி அல்ல - மோக்ஷமளிக்கைக்காக வல்ல-தம் திருப்பாதத்தால் ஆழ்வாரின் சிரசை அந்த அவதாரதசையில் தேடியது. பின் எந்தஹேதுவாலென்றால் தாமே 7-ம் பத்து இரண்டாம் திருவாய்மொழி 6-ம் பாசுரத்தில் அருளிச்செய்வது இங்கு உணர்த்தப்பாலது. "தாம்அநேகங்களான பிறப்புப் பிறந்தாலும் தம்மின் புதல்வர்க்குப் பலகாலம் பயன்சொல்லுந் தந்தைபோல, அவ்வப் பிறப்புக்களில் பகவான் தானுமவதரித்தியானும் நெறிதப்பிப் போகவொட்டாதபடி அவனைத் தவிர வேறொரு ஆச்ரியம்இல்லாமே அவனிடத்திலே பக்தியுக்தனாய்நின்று அவனையேதுதித்துப் பாடியாடி நிற்கும்படி யருள்செய்தான் என்கிறார். அதற்கடுத்த பாசுரத்தில் திருவிக்கிரமாவதாரத்தில்தன்னழகாலே தானாழ்வாரை வசியப்படுத்திஅடிமையாக்கி அவன் பாதங்களையே மருவித்தொழும் மனமே தந்தானாகத் தன்னிடத்தில் அவனுடைய வாச்சல்ய சக்தியைக் காட்டினானென்கிறார்.

ஆகையா லிங்குச்செப்பவந்தது, ஆழ்வாரிடத்தில் பகவானுக்கு உள்ளவிசேஷ கடாக்ஷமும் புத்திரவாத்ஸல்யமும் - எல்லாரையும் ஒக்க ஸமமாய் நடத்து

வானாய் நின்றாலும் ஆழ்வாரிடத்தில், மேல் ஆழ்வார் திருவாக்காலுரைத்திருக்கிறபடி, விசேஷ கடாக்ஷஞ் செய்தது"அறியாக் காலத்துள்ளே அவரை அன்புக்கு அடிமை செய்வித்தது" இவரின் முற்பிறப்புக்களில் செய்த ஸுகிர்த விசேஷம். இப்படிக்கு ஆழ்வாரை மாத்திரம் திருவடியால்தேடுதல் பக்ஷபாதமாகாதோ? உத்தம குணத்துக்குப் பொருந்துமோ என்ற சங்கை வேண்டா.இராமபிரான் நற்குணங்களைப் பகவானின் குணங்களாக வர்ணிக்கும் வால்மீகி மஹாரிஷி "ரக்ஷிதா ஜீவலோகஸ்ய மஹா ஸ்வஜனஸ்யச ரக்ஷிதா" என்று அடுக்கிடுகிறார். அதாவது இராமன் ராஜாவாயிருந்தெல்லாப் பிரஜைகளையும் காப்பாற்றினானாலும் தமக்கு ஸொந்தமாயடுத்தநெருங்கிய பந்துக்களை விசேஷமாக (உபரி) ரக்ஷிப்பது உத்தம குணங்களின் ஓர் கவடு என்றல்லவோ கொள்கின்றார். ஆகையால் ஆழ்வாரின் திவ்விய பக்தியால் திருவிக்கிரமாவதார தெசையிலும் தமது சிரஸைத் தேடி எம்பெருமானின் திருப்பாதம் நீண்டிருக்குமென்று கற்பிப்பதற்கு யாதொரு தட்டில்லை என்று நா மறியவேண்டும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[479-வது பக்கத் தொடர்ச்சி]

நம்பியின் சொற்கள் நகுதக் கனவே.

முன்னோனைக் கொல்லநின்ற அந்நிலையினுக் காற்றுமலினைந்திவை சொல்லிய தன் இளையோன்மொழிகளைச் செவியகம் ஏற்றனன் இராமன். "ஏ ஏ தம்பி, என் சித்தத்திற் கித்தூரம் முரணவல்லையோ ஒரு நீ" என எண்ணினான். சொல்லால் மனத்தால் செய்கையால் இராமனோடு மாறுபட்டவர் அதன் பயனை அநுபவித்தே தீரவேண்டும். சீதைக்கு வாய்த்த செவ்வி எல்லோர்க்கும் வாய்க்காது. 'கானகம் நீ என்னுடன் வாரல்'என இராமன் விலக்கினானாலும் அதற்கிணங்காமல் உடன்போக்கிற்கே தலைநின்ற அவ்வொரு மடவாள்,வெவ்விய கானகத்தின் கொடுமையைச் செப்பி விலக்கமுயன்ற இராமனுக்கு, "நின்பிரிவினுஞ்சுடுமோ அப்பெருங்காடு" என்றும், உடன்வருதலால் தனக்கு எல்லையற்ற இடர்தருவாள் என்று அவன் காட்டிய போது, "உற்றுநின்றதுயர் இதொன்றுமே, என்னைத் துறந்தபின் இன்பங் கொலாம்" என்றும் இராமன் வாயடங்க எதிர்விளம்பித் தன்கருத்தைச் சாதித்துக் கொண்டனள் †. இவ்வண்ணம் தன்மனையாட்டியின் திறத்திலின்றி ஏனையோரிடத்தெல்லாம், வாலியைத் தவிர்த்து, செல்லுஞ்சொல் வல்லவன் இவ்விராமன். இவன் கையிருந்த சுடுசரமனைய சொற்கள் வேண்டிய வேளையில் வாய்நின்று வந்திடவல்லன. இதற்கு ஒவ்வோர் வேளை இலக்காயினோர் § கோசிகன், ‡ கௌசலை முதலாய எத்தனையோ பலர். முன்னர், "பொன்மான் இத்தகைய தொன்று இயற்கையாக இருத்தல் இயலாதென்று தடுத்துச்சொன்ன இலக்குவனை "இல்லாதன இல்லை இளங்குமரா"எனவொரு வாக்கியத்தால் மருட்டி இவ்விராமன் "வாயடியடித்து" அடக்கிவிட்டான். எனினும், அவ்விடத்து வெப்பத்திலும் விளையாட்டேதானதிகம். இவ்விடத்திலோ இலக்குவன் இராமன்வாயால் ஆற்றமாட்டா வசையுண்கின்றான். வாலிக்குக் கொணர்ந்திருக்கும் வில்லினுங் கொடியது தன் தம்பியின்மேல் துறந்த இச்சொல். ஒரு வசையை வசையாகவே ஏவினால் அவ்வசையின்வேகங் கடுக்குமேனுங் கொல்லாது; மற்று, அவ்வசையை அருமைமொழிபோல் மெல்லென மெல்லென நுழைக்குங்கால்,அதற்கு இலக்காவோர் நெஞ்சம்புழுங்கிச் செத்தவர்க்கே நிகராக நிற்றல் வேண்டும். விற்றிறத்திற்குப் பின்னிடாத சொற்றிறம் வாய்ந்தவன் இராமன்,தன்னின்றுமாறுபட்டொன்றுகருதத்துணிந்த தம்பியை, வசைகரந்தசில அருமை மொழிகளால் உதிர்த்துவிட உன்னினனென,

அத்தா விதுகே ளெனவாரியன் கூறு வானிப்
பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேச லாமோ
எத்தா யர்வயிற் றினும்பின்பிறந் தார்க ளெல்லா
மொத்தாற் பரதன் பெரிதுத்தம னாத லுண்டோ

[அப்பா, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேள்; என்று இராமன் பின்வருமாறு சொல்வான்-"பித்துக்கொண்டஇம்மிருகங்களின்ஒழுக்கத்தை ஒருபொருளாக மதித்துப் பேசலாமோ? அதுவுமன்றி, எல்லாத் தாயர் வயிற்றிலும் பின்பிறந்த தம்பியரும் தம் தமையன்மாருடன் மனமொத்து இருந்துவிட்டால் பிறகு பரதன் பெரிதும் உத்தமன் என்னற் குரியவன் ஆவது உண்டோ]

என இயம்பிவிட்டான். சுக்கிரீவன் செய்கை கண்டு முன் இலக்குவன் ஒன்றும் உணர்விலனாக இருந்தானென்றால், இராமனது இச் சொல்லைக்கேட்டு இவன் இப்பொழுது யாதும்உயிர்ப்பிலனாகித் தீர்ந்திருத்தல் வேண்டும்.தாம்'மானுடமே'என்ன அனுமன்வற்புறுத்துவானாயினுமவன் இனத்தவரை இராமன் 'பித்தாய விலங்கு என்று பேசுவதுகேட்டு "என்னிது"! என்று அயிர்த்து வியக்கக்கூடியநிலையில் இப்பொழுது இலக்குவன்றன் கலங்கியமனம் இருந்ததில்லை. இதுபற்றி இவன், ஒன்றொடொன்று இணைக்கமாட்டா இறும்பூதெய்தி நிற்கவேண்டிய செவ்வி சிறிது பின்னரே, வாலி தான் "உணர்வு சென்றுழிச்செல்லும் பித்தாய ஒழுக்கமுடைய வொரு விலங்கே" என்ன வாதிக்கும்போது, இராமன் "அன்று அன்று,நானே உன்னை விலங்கென்று கொள்ளேன்" என மறுத்துரைப்பதைக் கேட்குங்கால் நேர்ந்திட நிற்கின்றது. இப்பொழுது இராமனிப்படி வாலிசுக்கிரீவர்களைப் பித்தாயவிலங்கே என்று தன்னிடத்தில் இழித்துப்பேசுவதையும் அவ்வாயினாலேயே,'விலங்குஅல்லை நீ'என்று பின் வாலியை உயர்த்திவைப்பதையும் இரண்டையும் தன் இரண்டு செவிகளால் கேட்கின்ற இலக்குவன், "கைத்த சொல்லால் உயிரழுந்தும் புதல்வற் பிரிந்தும் கடையோட மெய்த்த வேந்தன் ஒரு புதல்வா, நீ பொய்யும் புகலப் புக்காயே" என்று அவ்வாலியின் எதிரிலேயே அவ்விராமனைக் கேட்பதாயினுங் கேட்டிருக்கலாம். பாவம், தனது முன்னோன்பால் அன்பல்லாமல் வேறொன்று

---

† இவ்வரலாற்றின் விரிவை 4-வது வால்யூம் 606-வது பக்கத்தில் காணலாம்.

§ இவ்வரலாற்றின் விரிவை, 1-வது வால்யூம் 784-வது பக்கத்தில் காணலாம்.

‡ இவ்வரலாற்றின் விரிவை, 4-வது வால்யூம் 334-வது பக்கத்தில் காணலாம்.

மறியாப்பேதை இலக்குவன் இப்படி நினைத்தும் இருப்பான் என்று எண்ணலரிது. இதனைச் சொல்லாமை நினையாமையுடன் நின்றானலன் இலக்குவன். "நான் விலங்கு இல்லையாயின் பின் நீ ஏன் வெவ்விய புளிஞனென்ன மறைந்திருந்தெய்தாய்" என்றுவாலி நனித்தொரு கேள்வி கேட்கவும், இராகவன் வாயொடுங்கி நின்றபோது இவ் விளையவள்ளலோ, உடுக்கையிழந்தவன் கைபோன்று உதவிக்கு விரைவுடன்வந்து அண்ணன் செய்கைக்குஓர் அமைதி காட்டவும் முயல்கின்றான். இன்னவோர் காவறியா இளவலைநோக்கி, "எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்களெல்லாம் ஒத்தால் பரதன் பெரிதுஉத்தமனாதலுண்டோ" என்றானே இவ்வொரு பெரியவன்என்னும் பரிவு யாரே கொள்ளார். வாலியைக் கொல்லவந்த சுக்கிரீவன்செய்தியே பொது இயற்கையென்றும்,பின்பிறந்தார் ஒத்திருப்பது ஓரோவழி உத்தமர்நிலைமையென்றும் காட்டவேண்டுமென்பது இராமன் கருத்தாயின், "பின் பிறந்தார்கள் எல்லாம் ஒத்தால், ஒரு நீ பெரிது உத்தமனுவதுண்டோ" என்று எளிதிற் கூறியிருக்கலாமே. அவ்வாறு கூறுவதின்றிப் பரதனையே உத்தமத்தம்பிக்கு உதாரணமாய் எடுத்துக்காட்டியதன் கருத்தை இலக்குவன் அறிந்து மனம் புழுங்கியிருப்பானென்பதில் ஐயமில்லை - பிறிதின் நவிற்சியிலெல்லாம் மிகவும் நுட்பமானபிறிதின் நவிற்சிஇதுவாயினும், "யான் செய்ய நினைத்ததொன்றிற்கு நீ மனம் ஒவ்வாமல் மாறுபட்டமையால், இலக்குவ இனி நான் உத்தமமான, தம்பியென்று உன்னைக் கொள்ளமாட்டேன்" என்னும் பொருளே இதனில் அடங்கியிருப்பதைச் சிறு பிள்ளையுந் தெரிந்துகொள்ளும். நகரமுந் தாயிலுந் துறந்து தன்னுடனே போந்திருந்த புண்ணியனும் இவ்விலக்குவனை இராமன், இவ்வண்ணம், பரதனைப்பாராட்டுவான்போல் பகன்றவொரு வார்த்தையால் தொலைத்துவிட்டான்.

எனினும் தன் சித்தத்தை எதிர்த்தா னிவ்விலக்குவனென்றவோர் பழியைத் தீர்க்கும்பொருட்டுப் பேசிய பெற்றியேயன்றி இராமன் இதனைப் பரிவிகந்து உரைத்தானல்லன். இலக்குவன்பால் இராமன் வைத்திருந்தவோர் எல்லையற்றஅன்பின் திறம்எத்துணைத்தென்பதை இயம்பவேண்டா. நீர் கொணர்வான் சென்ற இத்தம்பிஅயோமுகியின்கையில் அகப்பட்டுத் திரும்பாமையால், அவனை இழந்து தான் இருக்க ஆற்றாமல் இராமன்,

அறப்பா லுளதே லவன்முன் னவனுய்ப்
பிறப்பா னுறின்வந் துபிறக் கவெனு
மறப்பால் வடிவாள் கொடுமன் னுயிரைத்

துறப்பதற்கு நின்ற நிலையையேனும், மற்றுப்பின்னர், பிரம்மாத்திரத்திற்கு இலக்காகி வீழ்ந்துகிடந்த இத்தம்பியைக் கட்டித் தழுவி,

அறந்தாய் தந்தை சுற்றமு மற்று மெனையல்லால்
துறந்தா யென்று மெய்ம்மற வாதாய் துணைவந்து
பிறந்தா யென்னைப் பின்பு தொடர்ந்தாய் பிரிவாற்றாய்
இறந்தா யுன்னைக் கண்டு மிருந்தே னெளியேனே

என்று அத்தம்பியின் அருமையை அறிந்துரைத்துப் புலம்பியதையேனும், அன்றியும்,"பொருந்தேனுனிப் பொய்ப்பிறவிக்கும் பொறையொல்லேன்" என விளம்பியதையேனும் கருதுங்கால், இன்று இங்கு இலக்குவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கவே, பரதனைப் பெரிது உத்தமனாகப் பாராட்டிப் பேசினனேயன்றி,மனமுற இலக்குவனை வெறுத்துரைத்த பான்மைத்தன்றுஇவ்வாசகம்.

எனின் தன்னுடைய சொல் இலக்குவன் உள்ளத்தில் எத்துணை ஆழ்ந்து தைத்ததென்பதை அவனது முகக்குறி இராமனுக்குக் காட்டியிருக்கும். இராமன் மனம் சற்றே இளகலுமானான். "ஐயோ பாவம், இப்பேதைத் தம்பியை இப்படி வருத்தினேனே" என ஒருவாறு அதன் வேகத்தைக் குறைக்க எண்ணி,

விற்றாங் குவெற்பன் னவிலங்கெழிற் றோள மெய்ம்மை
உற்றார் சிலரல் லவரேபல ரென்ப துண்மை
பெற்றா ருழைப்பெற் றபயன்பெறு மிற்றி யல்லா
லற்றார் நவையென் றலுக்காகுந ரார்கொ லென்றான்

[வில்லைத்தாங்கியிருக்கின்ற மலைபோன்றவிளங்குகின்ற தோள்களையுடைய மைந்தனே,மெய்ம்மையை எய்தினவர் சிலராக அது எய்தாதவரே பலர் என்பது உண்மை.ஆகையால், கிடைத்தவர் இடத்தில் கிடைக்கின்ற பயனைப் பெற்றுக்கொள்வது அல்லாமல் குற்றமே இல்லாதவர் என்று சொல்வதற்குரியவர் யார் உளர்—என்றான்]

இதுஇலக்குவனுக்கு ஆறுதலாகக்கூறியவார்த்தை; அதுவே இராமன் தன் செய்கைக்கு அமைதி காட்டிய பரிசுமாக நேர்ந்திருக்கின்றது. இதனைச் சிறிது ஆராய்தல், வாலிவதையின் தத்துவத்தை விளக்குதற்குதவியாய் நிற்கும்.

ஒன்றினை முதலிலே உரைத்தல் வேண்டும். முன் இலக்குவன் வாலியின் வதைக்குத் தான் இணங்கியதில்லை யென்பதைத் தெரிவித்ததோடுநிற்காமல் பிறகு அதற்கு ஓர்காரணமும் காட்டப்புகுந்த தன்மையால் தன்னுடைய பெருமையைச் சாலக் குறைத்துக்கொண்டவாறே இராமனும் இங்கு அவ்வதைக்கு இணங்கிய தன் சித்தத்தைமட்டும் செப்புவதின்றி அதற்குக் காரணம் கூறப்புகுந்தமையால் தன்னுடைப்பெருமையையும் பலபடி குறைத்துக்கொண்டான்என்பதிலோ ஐயமில்லை. வாலிசுக்கிரீவர்களைப் பித்தாய விலங்குகளென்று பேசி, ஆதலின்அவர்தம் ஒழுக்கத்தை ஒரு தருமத்துள் வைத்து மதித்தல் வழக்கன்று என்று இலக்குவனுக்கு இங்குக் கூறியவன், பிறகு இப் பித்தாய ஒழுக்கினையே தன்சார்பு காட்டி வாதித்தவாலியை மறுத்து, அவனை விலங்கினின்று வேறாக மதித்தலே முறையென்று நிறுவ முயனுமளவில், இராமபிரானது தோற்றம் தருமத்தின் மூர்த்தியிலிருந்து ஓர் சமயோசித வாதியாகவே மாறுகின்ற குறை மறக்கற்பாலதன்று. இதனைத்தானும் ஒருவாறு பொருத்தானும் பொறுக்கலாம்; மற்றினி, அறமேசெய்த அறத்தால் வந்து அவதரித்த இவ்விராமன், உலக இயல்பின் உண்மையையும் அதனிடை மனிதர் விவகரிக்க வேண்டிய முறைமையையும் தன்னுடைய செய்கைக்கு ஆதாரமாக எடுத்துக் கூறுகின்றவைகளைக் கேட்குங்கால் கூசாச் செவிகள் குருட்டுச் செவிகளே. §

சுக்கிரீவன் தன் தமையனைக் கொல்லியவந்த இது யாதும் விபரீதமில்லைஎன்னுமளவு துணிந்துவிட்டான் இவ் விராமபிரான். ஏனெனில், 'மெய்ம்மை உற்றார் சிலர் அல்லரே பலர்' என்பராம், அது உண்மையாம்; ஆகையால், வேகின்ற வீட்டில் பறித்தவரையில் ஆதாயம் என்ன, அவரவரிடத்தில் கிடைக்கக்கூடிய உபயோகத்தைப் பற்றிக்கொள்ள வேண்டுமாம்; குற்றம்

§ குருட்டுச் செவியும் இருக்கக்கூடும் என்று கம்பர் குறிப்புணர்த்தியிருப்பதை, 6-வது வால்யூம் 176-வது பக்கத்தில் காணலாம்.

பார்க்கச் சுத்தம் இல்லையாம்;ஆதலினாற்றான்தான் சக்கிரீவனது உறவிற்கும் வாலியின் வதைக்கும் உடன்பட்டானும். யார் சொல்லும் வார்த்தை இது! அகம் போற் புறம். இவ்வுலகடங்கலுந் தேடியும் 'பொல்லாதான் ஒருவன் யான் கண்டிலேன்' என்று தருமராசனும், "நல்லவன் ஒருவன் யான் கண்டிலேன்" என்று சுயோதனனும் விளம்பினர் என்னும் வழக்குப் பொய்யன்று. தமக்கொரு கடவுளிருக்க அக்கடவுளில் நம்பிக்கையுடையவர் கூறவல்ல வார்த்தையன்றே இது. ஈசுவர சிருஷ்டியில் மெய்ம்மையுற்றார் சிலர் அல்லரே பலர்' என்பதனினும் தெய்வநிந்தனை வேறில்லை. இது உண்மையுமன்று. உண்மையே யாமாயின் தருமமே தன்னைத்தான் மறுத்துக்கொண்டது போலாம். "தருமமே தவிர்க்குமோ தன்னைத்தானரோ" என்று அங்கு வாலி தாரையைஇடித்துக்கேட்டதற்கெதிராக இங்கு இராமன், "மறுக்கும், மறுக்கும், தன் வில்லாலன்றிச் சொல்லாலும் மறுக்கும்" என அறைகூவி ஆரவாரம் செய்வதுபோல்நிற்கின்றது இவ்வாசகம்."மெய்ம்மையுற்றார் சிலராக அல்லரே பலரென்னின், அந்தப்பொறுப்பு, தனிப்பொரும்பரம, நின்னுடையதே யன்றோ" என்று கேட்டால் என் சொல்வான், பாவம், ஏழை இவ்விராமன்.

ஆம், இராகவன் இப்பொழுது நம் பரிவிற்கு மிகவும் பாத்திரமாயிருக்கின்றவொரு ஏழையேயாகி நிற்கின்றான் என்பதில் ஐயமில்லை. கடவுள் இவன் தன் காரியத்தை நடத்திவருதற்கிடையே மனிதனாக நடிக்கப்புகுந்தோறும் ஒன்றோடொன்றெவ்வாக்குழப்பத்தால் விளைந்த பல விபரீதங்களில் இதுவு மொன்று. முன் அயோமுகியினால் நேர்ந்த ஆபத்தினின்று தப்பி வந்த தன் தம்பியைத் தழுவிக்கொண்டு,

ஆய்வுறு பெருங்கட லகத்து ளேயவன்
பாய்திரை வருதொறு பரிதற் பாலனுந்
தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்டயா
நோயுறு துயரென நுடங்க னேன்மையோ

என்னப் பகர்ந்த வது, தமக்கொரு கடவுளில்லாதார் கொள்ளுங்கொள்கையே ஆமாறு போல * பொல்லாதார் பலராகும் உண்மையும் அன்னவர்க்கே ஏற்றவோர் அவலச் செய்தியாம். அவ்வயின் காட்டியிருக்கும் வண்ணம், கடவுள் இன்றி வாழவல்லவர் அக்கடவுள் ஒருவரே. ஈதறிந்தே அவரை எல்லாம் வல்லவர் என அழைக்கின்றனர். இராமனே கடவுளாதலால் அவனுக்கு ஓர் கடவுள் இருப்பதெங்ஙனம்! இப்படிக் கடவுளில்லாதவொருமனிதனாகநடிக்கப்பார்க்கிறான். இந்நாடகத்தில், கடவுளில்லாமை என்றுமே இராமனுக்கோர் கடக்கரிய குறையாய் நிற்கின்றது. இப் பிறவியே துன்பப்பெருஞ்சிறை என்பான் அங்கு—ஆம், கடவுளில்லாதார்க்கு. இவ்வுலகில் பொல்லாதாரே பலரென்பான் இங்கு- ஆம், கடவுளில்லாதார்க்கே இது உண்மை.இவ்வகையில் உலகத்தின் "உண்மையை"க் காணும் கண், கம்பரின்பரிகசத்தையே மேற்கொண்டு கூறலாமெனின், செவிட்டுக்கண் என்னலாம். ‡

ஆதலின், பொல்லாதார் பலர் என்பதை உண்மையென்று கம்பர் கொண்டனரென் றெண்ணி அப்புலவர்பெருமானுக்குப் பிழையிழைக்க லாகாது. இராமனுடைய வார்த்தைகள் இவை. இந்நாடகத்தி லிவன் இங்ஙனமேகூறவேண்டிநேர்ந்தது இன்றியமையாமையானவாறும் அறியப்பெற்றபின், இறுதியாக வெழவல்ல சிந்தனையும் ஒன்றே. இப்படலத்தின் முதலில், "வாலியைக் கொல்லத் துணிந்தனென், மறைவிடத்திருந்து கொல்லவும் நிச்சயித்துள்ளேன் ,என் கருத்து இது" என்று கடவுட்காரியம் தனதாவதைக் குறிப்புணர்த்திய நிலையிலேயே நின்றிருப்பானாயின் இந்த விபரீதவார்த்தைகள் நேர்ந்திருக்கமாட்டா.தன் அருமைத்தம்பிக்குஅவ்விரகசியத்தை வெளிப்படுத்தாமல், மனிதனாய்த் தான் செய்கின்ற இச்செய்கை தக்கதே என்று வீணே நிறுவப்புக்கனன். ஆதலின் அது அத்துணையும் பிழைத்தது. இவ்வாலிவதையின் திறத்தில் இப்படியே தெய்வ-மானுடக் குழப்பம் எங்கும் கலந்திருப்பதாற்றான், அதன் நீதிக்கு ஓர் அமைதி காணமாட்டாமல் அறிவாளிகள் தயங்குகின்றனர்.

சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரமுடையவன் இராமன் தன் மெய்ம்மையை மறைத்து ஒரு மானிடனாக வாலியின்மேல் எய்தவில்லும் பிழைத்தது; அவ்வாறே அதற்கிணங்காத தன் தம்பி இலக்குவன்மேல் எய்த சொல்லும் பிழைத்தது. மனிதர் கடவுளாக நாடக அரங்குதோறும் நனி நடித்துவிடலாம்; மற்றுக் கடவுளோ மனிதனாகநடித்து ஒருபோதும்கடைத்தேற இயலாது. அதுமாத்திரம் வல்லவரல்லர் கடவுள், ஆதலின் மானுடம் வென்றதன்றே.

* இக்கருத்தின் விரிவை, 6-வது வால்யூம் 831 வது பக்கத்திற் காணலாம்.

‡. "உண்மையில் உழல்வார்திறம்" என்னும் தலைப்பின் கீழ் 4-வது வால்யூம் 13, 14, 15, 16, 17, வது இதழ்களின் வரையப்பெற்றுள்ளதலையங்கங்கள் இவ்வயின் ஒப்பு நோக்கத்தகுந்தன.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[474-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5. களம் 2.

இடம் :—ஹார்ட்காஸல் வீட்டின்பின் உள்ள தோட்டம்.

(ஹேஸ்ட்டிங்ஸ் வருகிறான்)

ஹேஸ்ட்:—என்ன முழு மூடன் நான். என்னை அவமானப் படுத்துவதையே விளையாட்டாகக் கருதியிருக்கும் ஒருவன் சொன்னதை நம்பி நான் இங்குக் காத்திருக்கின்றேனே. இங்கு வருகின்ற எண்ணமோ அவனுக்குஒருபோதும் இருந்ததில்லை.போகின்றேன். என்ன இது நான் காண்பது. அவனேதான் வருகின்றான். என் நெவில்லியைப்பற்றிய செய்தியும் சொல்லுவான்.

(டோனி வருகின்றான்.)

ஹேஸ்ட்:—உண்மையான மேன்மகனே, உன்சொல்லைக் காப்பாற்றுகிறவன் நீ என்பதை இப்பொழுது தெரிந்துகொண்டேன். இதல்லவோ நட்பிற் கழகு.

டோனி:—ஆம், உன் நண்பனே நான். நடந்தவையெல்லாம் உனக்குத் தெரியுமாயின் என்னினும் சிறந்த நண்பன் இல்லை யென்பதும் உணர்ந்துகொள்வாய்.

நடுஇராத்திரியில் செய்த இந்தக் குதிரைச்சவாரியோ நிரம்ப சிரமமையா. என் எலும்பையெல்லாம் குலுக்கி நொருக்கிவிட்டது இது.

ஹேஸ்ட்:—உன்னுடன் வந்தவர்களை எப்படி எங்கே விட்டிருக்கிறாய்? பத்திரமாயிருக்கிறார்களா? வீடு சேர்ந்தார்களா ?

டோனி:—இரண்டரை மணி நேரத்திற்குள் இருபத்தைந்து மைல் செய்த இது அற்பச் சவாரி அல்ல. பாவம் குதிரைகள் புகைகின்றன. இந்தப் பெண்களை இழுத்துக்கொண்டு பத்துமைல் சுற்றுவதைக் காட்டிலும், ஒரு நரியைத் துரத்திக்கொண்டு நாற்பது மைல் ஓடலாமே.

ஹேஸ்ட்:—நல்லது, உன்னுடன் வந்த மாதர்களை எங்குவிட்டிருக்கிறாய்? அதனை அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேன்.

டோனி:—எங்கே விட்டேனா? என்னகேள்வி யிது. எங்கே அவர்களைப் பிடித்தேனோ அங்கேதான் விட்டிருக்கிறேன்.

ஹேஸ்ட்:—புதிராக இருக்கின்றதே இது.

டோனி:—இந்தப் புதிரை விடுவி பார்ப்போம். வீட்டைச் சுற்றிச்சுற்றிப்போகும், ஆனால், வீட்டையோ தொடாது, எது அது?

ஹேஸ்ட்:—இன்னும் எனக்கு வழி துறை விளங்கவில்லை.

டோனி:—ஏனையா, அதுதான் அது! வழிதுறை காட்டாமல் அவர்களை நான் இழுத்தடித்தேன். இதற்கு ஐந்துமைல் பிரதேசத்திலவர்கள் ருசிபார்க்காத சேறோ குட்டையோ இல்லை.

ஹேஸ்ட்:—ஹ, ஹ, ஹா! இப்பொழுது விளங்குகின்றது. தூரம் தூரம் போவதாக அவர்கள் எண்ணியிருக்க நீயோ சுற்றிச்சுற்றியே அலைந்தாய். ஆகையால் அவர்கள் மீண்டு மிப்பொழுது தம் வீட்டிற்கே வந்து சேர்ந்துவிட்டனர்.

டோனி:—சொல்கின்றேன் கேள். முதலில் இந்த வீதியின் கோடியில் உள்ள சேற்றுநிலத்தில் குதிக்க வைத்தேன். பிறகு அதற்குஅப்பால் உள்ள குன்றில் மேலுங்கீழும் உருட்டினேன். பிறகு, அதற்கு அருகிலுள்ள தூக்குமரத்தைச் சுற்றிச்சுற்றிக் காட்டினேன்; அப்புறம், வழியை வளைத்துக்கொண்டு வந்து நமது தோட்டத்தின் கோடியில் உள்ள குதிரைகழுவுங் குட்டையில் இப்பொழுது அமிழ்த்திவிட்டு வந்திருக்கின்றேன்.

ஹேஸ்ட்:—ஆபத்தொன்று மில்லையே?

டோனி:—இல்லை இல்லை ! என் தாயார் பயத்தால் குலை நடுங்கிக்கிடக்கின்றாள், அவ்வளவுதான். நாற்பது மைல்களுக்கு அப்பாலே தான் இருப்பதாக அவள் எண்ணம். இனி இந்தக் குதிரைகள் நகரக்கூட முடியாது. ஆகையால், உன்குதிரைகள் ஆயத்தமாக இருக்குமானால், நீ இப்பொழுதே நெவில்லியை அடித்துக் கொண்டு ஓடிவிடலாம்; யாரும் உங்களைப் பின்தொடராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்.

ஹேஸ்ட்:—நண்பனே, உனக்கு நான் என்ன நன்றி செலுத்தப்போகிறேன்.

டோனி:—நண்பா, மேன்மகனே, எல்லாம் இப்பொழுது. சற்றுமுன், மடையன், நரிக்குட்டி, கொல்லட்டுமா, எல்லாம் ! உனக்கு முன்னே வந்த கோபத்தில் என்னைக் கொன்றிருப்பாயானால் இப்பொழுது என்னசெய்வாய். நான் செத்துப்போயிருப்பேன், நீ போய்த்தூக்குமரத்திற்குத்தானே முத்தங்கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும்.

ஹேஸ்ட்:—இந்த வசை எனக்குவேண்டியதுதான். நல்லது, நான் விரைந்துசென்று நெவில்லியைக் குதிரைக் குட்டையிலிருந்த கரையேற்றவேண்டும். கிழவியை நீபராக்குக்காட்டிவைத்துக்கொள்வாயானால், குமரியைப்பற்றிய கவலையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(போகிறான்)

டோனி:—நல்லது, இதோ அம்மாளும் வந்துவிட்டாள், நீ மறைந்துவிடு. குட்டையைவிட்டு எப்படியோ இவள் தானே கரையேறிவிட்டாள். இடுப்புவரையில் சேற்றலங்காரம் சிறக்கத்தோன்றுகின்றது பார்.

[டோரதி வருகிறாள்]

டோரதி,—ஓஹோ! டோனி, செத்தேனடா நான். பொடிப்பொடியாய்ச் சிதைந்துபோனேன். கடைசியில் அந்த முள்வேலியின்மேல் விழுந்ததோடு என்காரியம் முடிந்துவிட்டது.

டோனி:—ஏஹே! அம்மா! எல்லாம் உன்னால்தானே! வழிதுறைதெரியாமல் நடு இராத்திரியில் ஓட்டம் பிடிக்கவேண்டு மென்றாய்.

டோரதி:—நம் வீட்டையே மறுபடி சேர்ந்துவிட்டாலாகாதா என்று எண்ணுகிறேன். பிரயாணம் மிகச் சிறியது—அடைந்த ஆபத்தோ மிக அதிகம். சேற்றில் விழுந்து சாக்கடையில் உருண்டு வேலியில் புரண்டு கடைசியில் வழியையும் இழந்துவிடுவதா! நாம் இப்பொழுது எங்குத்தான் இருக்கின்றோம் என்று எண்ணுகிறாய், டோனி ?

டோனி:—மண்டையுடைச்சான் மைதானத்தில் இருக்கின்றோம் என்று எண்ணுகிறேன். நம் வீட்டிற்கும் இதற்கும் நாற்பது மைல்.

டோரதி:—அடெ தெய்வமே, தெய்வமே! நிரம்ப ஆபத்தான இடமாயிற்றே இது. வழிபறிகொள்ளை ஒன்றுதான் குறைவாயிருந்தது. அதுவும் நேர்ந்துவிட்டால் இந்த இரவு நிரம்பிவிடும்

டோனி:—பயப்படாதே, அம்மா, பயப்படாதே. இங்கு இருந்த கொள்ளைக்காரர் ஐந்து பேரில், இரண்டுபேரைத் தூக்கிலிட்டுவிட்டார்கள். மற்ற மூன்று பேர் இன்றைக்கு இந்த வழி வருவார்கள் என்பது என்ன நிச்சயம்! பயப்படாதே. இரு இரு! அங்கு ஒரு ஆள் குதிரைமேல் வருகிறாப்போல் இருக்கிறதே; இல்லை இல்லை, அது மரம். பயப்படாதே.

டோரதி:—கொள்ளைக்காரன் வந்தாலும் வராவிட்டாலு மந்தப் பயத்திலேயே செத்துவிடுவேனடா நான்.

டோனி:—பார், அந்த மரத்திற்குப்பின், யாரோ மறைந்து எட்டியெட்டிப் பார்க்கின்றானே, பார்.

டோரதி:—ஐயோ தெய்வமே !

டோனி:—இல்லை இல்லை, அது ஒரு மாடுதான்; பயப்படாதே யம்மா, பயப்படாதே.

டோரதி:—இல்லையடா டோனி, ஒரு ஆள்தானடா இந்தப் பக்கம் வருகிறான். ஐயோ, நம்மைப்பார்த்துவிட்டால் ஐயையோ! என்னவடா செய்வோம்.

டோனி:—(ஒருபுறமாய்) அடெ துரதிர்ஷ்டமே ! ஹார்ட்காஸல் வழக்கம்போல் தோட்டத்தில் உலவிவருகிறார். (டோரதியைப்பார்த்து) ஆஹா! கொள்ளைக்காரன்தான் அவன். அவன் கையில் எத்தனை பெரிய கத்தி இருக்கிறது பார்....பயங்கரமான குரூபி......

டோரதி:—தெய்வமே! எங்களைக் காப்பாற்றமாட்டாயோ! இந்தப்பக்கந்தானே வருகின்றான்.

டோனி:—நீ ஓடிப்போய் அந்தப்புதரிற்குப்பின்னே ஒளிந்துகொள். நா னவனை ஒரு கை பார்த்துக்கொள்கிறேன். ஆபத்து எதாவது ஏற்படும்போல் இருந்தால் நான் இருமி, ஹும் ஹும் என்று கனைப்பேன். அப்பொழுது நீ நன்றாகப் பதுங்கிக்கொள்.

[ஹார்ட் காஸல் வருகிறார்]

ஹார்ட்:—யாரோ பயங்கொண்டு கத்தினதுபோல் கேட்டதே. ஆஹா, டோனி, நீதானா? இவ்வளவு விரைவில் நீ திரும்பிவிடுவாயென்று நான் எதிர்பார்க்கவில்லை. உன் தாயாரும் நெவில்லியும் பத்திரமாயிருக்கிறார்களா ?

டோனி:—அந்த அத்தைவீட்டில் பத்திரமாய்ப் போய்ச்சேர்ந்தார்கள்—ஹும்.

டோரதி (பின்னிருந்து) ஐயோ. ஆபத்து வருகிறாப் போலிருக்கிறதே.

ஹார்ட்:-மூன்றுமணிநேரத்திற்குள்நாற்பதுமைலா? சிறுவா, இது மிகவும் அதிகம்.

டோனி:—குதிரை நல்லதாயும் நமக்கு இஷ்டமும் இருக்குமானால், நெடுந் தூரமெல்லாம் சிறிய பிரயாணமாகிவிடும் என்பார்களே. ஹும்.

ஹார்ட்:—இன்னொரு குரல் இங்குக் கேட்டேன். அது யாரிடத்திலிருந்து வந்ததென்பது எனக்குத்தெரியவேண்டும்.

டோனி:—அது நான்தான் ஐயா அது. என்னுடன் நானே பேசிக்கொண்டிருந்தேன். நாலுமணிநேரத்தில் நாற்பதுமைல்கள் நல்ல சவாரிதான் என்று சொல்லிக்கொண்டிருந்தேன்-ஹும்-ஹும்- இல்லையா, நீங்களே சொல்லுங்கள். ஹும். இந்த இரவில் இப்படிச்சுற்றியதால் சளி பிடித்துக்கொண்டது. வீட்டிற்குள் போகலாம் வாருங்கள். ஹும்.

ஹார்ட்:—உனக்கு நீயே பேசிக்கொண்டிருந்திருக்கலாம்; ஆனால், உனக்கு நீயே பதிலும் சொல்லிக்கொண்டிருந்திருக்க முடியாதே. இரண்டு குரல்கள் என் காதில் விழுந்தது நிச்சயம். (உரத்து) மற்றவர் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்துத்தான் தீர்வேன்.

டோரதி:—(பின்னிருந்து) ஐயோ! நான் இருக்கும் இடத்தைத் தேடி வருகிறானே.

டோனி:— நான்தான் சொல்கின்றேனே, நீங்கள் தேடிக்கொண்டு போவானேன்? ஹும். ஹும். என் உயிர்மேல் ஆணை - நான் சொல்வது நிச்சயம்-ஹும். நான் சொல்கிறேன் கேளுங்கள்.

ஹார்ட்:— கேட்கமாட்டேன்; பார்த்தே தீர்வேன். நீசொல்வதை நான் நம்புவேன் என்று நீ எதிர்பார்ப்பது வீண்.

டோரதி:— (ஒளிந்திருந்த இடத்தைவிட்டு வெளி வந்து) ஓ தெய்வமே! என் பிள்ளையை, என் செல்லத்தை, ஐயோ, கொன்றுபோடுவானே இந்தப் பாதகன். இதோ, ஐயா, நல்லவரே, உங்கள் கோபத்தையெல்லாமென் தலைமேல் தீட்டிக்கொள்ளுங்கள். என் பணம் என் உயிர் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு இச் சிறுவனை, என் குழந்தையை, ஐயையோ உங்களுக்கு இரக்கமென்பது சிறிதேனு மிருக்குமாயின், விட்டுவிடுங்கள்

ஹார்ட்:—என்ன விது, என் மனைவிதானே இவள்! எங்கிருந்து வந்தாள்! இதற்கெல்லாம் என்ன அர்த்தம்!

டோரதி:—(காலில் விழுந்து) ஐயா, கொள்ளைக்காரப் பிரபுவே, எங்களைக் காப்பாற்றுங்கள். எங்கள் பணம் நகைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு. உயிரைமாத்திரம் விட்டுவிடுங்கள். உங்களைப் போலீஸார் கையில் காட்டிக்கொடுக்க மாட்டோம். நல்ல எங்கள் கொள்ளைக்காரப் பிரபுவே, ஸத்தியம்.

ஹார்ட்:—இந்தக் கிழவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று எண்ணுகின்றேன். என்ன, டோரதி, என்னைத் தெரியவில்லையா உனக்கு ?

டோரதி:-ஹா! என்கணவன் ஹார்ட்காஸல்தானே இவர். பயத்தால் என் கண் அவிந்துபோயிற்று. வீட்டிலிருந்து இத்தனை தூரத்திற்கப்பால் இந்த இரவில் உங்களை இங்குச் சந்திப்போமென்று எப்படி எதிர்பார்ப்பது? எங்களைப் பின்தொடர்ந்து எதற்காக வந்தீர்?

ஹார்ட்:—என்ன, டோரதி! ஏனிப்படிப் பிதற்றுகின்றாய். வீட்டின்வாயிலிற்கும் இதற்கும் நாற்பதடிகூட இல்லை, இவ்வளவு தூரம் இவளைத்தொடர்ந்து வந்தேனாமே! (டோனியைப் பார்த்து) ஏ, குரூபக் குரங்கே, உன் பழைய குறும்புகளில் ஒன்றோ இது. (டோரதியைப் பார்த்து) நம் வீட்டு வாயிற்கதவும் அத்திமரமும், தெரியவில்லையா உனக்கு! தோட்டத்தின் கோடியிலிருக்கின்ற குதிரைகழுவும் குட்டைகூடவா, உனக்கு நினைவில்லை?

டோரதி:—அகா, என் உயிர்போகும்வரையில், அந்தக் குதிரைக் குட்டையை மறக்கமாட்டேனே, நான், (டோனியைப் பார்த்து) ஏ, துஷ்டப்பேயே, உனக்கேதானேடா நான் இத்தனைக்கும் கடமைப்பட்டிருக்க வேண்டும்! உன்தாயாரை நீ இப்படி வயிற்றெரிச்சல் கொட்டிக்கொள்வதற்கு இரு இரு, சொல்லித்தருகிறேன்.

டோனி:—அடெய யடெ, அம்மா, நீதான்என்னை இப்படிக் கெடுத்துவிட்டாய் என்றுஇந்த ஊரெல்லாம் சொல்லுமே. அதன்பலனை நீ அனுபவித்துதானே தீரவேண்டும்.

டோரதி:—கெடுத்தேனா நானுன்னை! கெடுக்கிறேன் இன்னும் பாரடா!

[டோனியைத் துரத்திக்கொண்டு டோரதி போகிறாள்]

ஹார்ட்:—இவன் சொன்ன பதில் நியாயமானதே.

[போகிறார்]

[ஹேஸ்ட்டிங்ஸும் நெவில்லியும் வருகின்றனர்]

ஹேஸ்ட்:—என் அருமைநெவில்லி, ஏன் இப்படித் தயங்குகின்றாய்? இன்னு மொருநிமிடம்
செய்வோமானால், அதற்கப்புறம்

M21,N24RN
N34.7.31
19.7.181

கெட்டுவிடும், சிறிது தைரியம் செய்துகொள். அவள் கோபத்திற்கு எட்டாத தூரம் போய்விடுவோம்.

நேவில்லி:—அது முடியாது. நான் இவ்வொரு இரவு பட்ட பாட்டையெல்லாம் நினைத்தால், புதிய ஆழத்தில் இனித் தலையிட்டுக்கொள்ள எனக்குச் சக்தியில்லை. இரண்டுமூன்றுவருடம் பொறுத்திருப்பதே நல்லது. அப்பொறுமை உத்தமமான இன்பத்தால் முடிசூட்டப்பெறும்.

ஹேஸ்ட்:—அத்தனை காலம் பொறுத்திருப்பதோ இடையிலே மாறிவிடுவதனினுங் கொடியதாயிற்றே. என் மோகினியே, இப்பொழுதே பறந்துவிடுவோம். வா. இன்றுமுதலே நம்முடைய இன்பத்திற்குத் தேதி வைப்போம். ஆஸ்த்தியெல்லாம் அழிந்துபோகட்டும்! அன்புடன் திருப்தியும் இருக்குமானால், நம்முடைய நிலைமை அரசசெல்வத்திலும் அதிகம் இன்பமுடையதாகாதா! நான்சொல்வதைக்கேள். வா என்னுடன்.

நேவில்லி:—இல்லை இல்லை முன்புத்தியே மீண்டும் என் உதவிக்கு வருகிறது. அதன்படிதான் நடப்பேன். நான் ஆர்வத்தின் கொந்தளிப்பால் இப்பொழுது ஆஸ்த்தியை அலக்ஷியஞ் செய்துவிடலாம். பிறகு இதற்காக ஆயுள்வரை நாம் மனம் வருந்தவேண்டி வரும். ஹார்ட்காஸலினிடத்தில் நம்முடைய நிலைமையைச் சொல்வோம். அவர் நமக்கு நீதி செய்யலாம்.

ஹேஸ்ட்:—அவருக்கு இஷ்டமிருந்தாலும் உனக்கு உதவிசெய்யச் சக்தி யில்லையே.

நேவில்லி:—அவருக்குச் செல்வாக்கிருக்கின்றது. அது உதவும்.

ஹேஸ்ட்:—எனக்கு நம்பிக்கையில்லை. ஆயினும் நீ வற்புறுத்துவதால் உடன்படுகிறேன்.

[போகின்றனர்]

இரண்டாங் களம் முற்றிற்று.

காலம்

[470-வது பக்கத் தொடர்ச்சி]

வாரம்.

வாரம் என்பது நாட்கள் ஏழு கொண்டதொரு காலப் பகுதியினை உணர்த்துமென்பதை அனைவரும் உணர்வர். இவ்வேழு நாட்களுக்கும் ஞாயிறு முதலாய கோள்களின் தொடர்பு தோன்றுமாறு ஞாயிற்றுக்கிழமை - பானுவாஸரம் - ஸன்டே (Sunday) திங்கட்கிழமை - இந்துவாஸரம் மூன்டே - மண்டே (Monday) என்றிவ்வகையே பெயரமைத்திருக்கின்றனர். இம்முறையே பெயரமைத்தது மாத்திரமின்றி ஞாயிறு முதலாக முறைப்படுத்தும் வகையிலும் அனைவரும் ஒருமித்த கருத்துடையவரா யிருப்பதும் கருதற்பாலதே. பழந்தமிழ் நூல்களுள் ஞாயிறு திங்கள் முதலிய சொற்களெல்லாம் பெரும்பாலும் ஞாயிறு திங்களென்னுங் கோண்மீன்களையே - ஒளிகளையே-குறிப்பனவன்றி ஒரு காலக் கூறுதனைக் குறிக்கும் இயல்பின அல்ல. ஆயினும் பிற்காலத் தவ்வகை படைத்துக்கொள்ளப்பட்டதென்பதை ஞாயிற்றுக்கிழமை (ஞாயிற்றுக்குரியது) என்பதுபோன்ற பெயர்களினின்றே உணரலாம். இவ் வேழுநாட்களையும் வாரமென்று குறித்து வழங்குவது புதியன புகுதலேயாம். வாரமென்ற சொற்பிரயோகஞ் சிலப்பதிகாரத்து மிகுதியாகக் காணப்படுகின்றது. ஆனால் அவ்விடத்து,

> வாங்கிய வாரத் தியாழுங் குழலும்
> ஏங்கிய மிடறு மிசைவன கேட்ப
>
> சில. அரங். 50-51

என்றும்,

> -வாரமிரண்டும் வரிசையிற் பாட" ஷை ஷை 136

என்றும் இவ்வாறு ஒருவகை இசையுருவம் தெய்வப் பாடல் முதலிய பொருள்களையே உணர்த்துகின்றது. கடைச்சங்க நூல்களுள்ளும் பெருவரவினதாகக் காணப்படவில்லை. எவ்வகையிலும் ஏழுநாட்களையுணர்த்தும் ஆற்றலுடைய வாரமென்னும் ஒருசொல் புதியதாகவே காண்கின்றது. இப்புதுமொழி எங்கிருந்து, எவ்விதம், வந்திருக்கக் கூடும் என்று சிந்திப்போமாயின் ஒன்று தோற்றுகின்றது. அதுதான் யாதெனின், நாளென்பதற்கு வடமொழியில் வாஸரம் என்பர். ஞாயிற்றுக்கிழமை முதலியவைகட்கு அவர் ஆதித்ய வாஸரம் ஸோமவாஸரம் என்று வழங்க ஆந்திரர்கள் ஆதித்யவாரமு ஸோமவாரமு என்பர். ஆகவே வடமொழி வாஸரமே வாரமு என்று தெலுங்கில் திரிந்து வருவதுபோல வாரம் என்று திரிந்து வாரமுவாரமு அல்லது வாரம் வாரம் என்று முடியக்கூடிய ஏழு நாட்களையும் குறித்ததொரு மொழியாகித் தமிழினுந் திசைச்சொல் லென்ற வகையாற் றழுவிக்கொள்ளப் பட்டதொரு புது மொழியேயாகும்.

மாதம்

இனி மாதம்என்ற பாகுபாட்டினைப்பற்றியுஞ் சிறிதாராய்வோம். திங்களின் தேய்வுவளர்ச்சிகளையுடைய பிறை இரண்டுஞ் சேர்ந்த—அல்லது கதிரவன் ஒவ்வொரு ராசியினும் நிற்கின்ற அல்லது ஏறத்தாழ முப்பது நாட்கள்கூடிய ஒரு காலப்பகுதியே இப்பொழுது நம்மால் மாதமெனப்படுவதாகும். இதனையேசிலர் திங்களின் தேய்வு வளர்ச்சிகளால் வந்ததென்கின்றனர். வேறுசிலர் ராசியுடன் ஞாயிறு கொண்ட தொடர்பா லுண்டாயதென்கின்றனர். மற்றுஞ் சிலர் நட்சத்திரங்களோடு அம்மதிக்கு உண்டாய தொடர்பாற்றோன்றியதென்கின்றனர். இன்னுஞ் சிலர் மதியின் தொடர்பேயும் வேண்டாது நாட்கணக்கே யிடுகின்றனர். இவையனைத்தினு மொவ்வோரளவு உண்மையும் இருக்கின்றது. அதனையும் மேற் சிறிது உணரலாம். மாதமென்னுஞ் சொல்லின்பொருளை யாராயுமிடத்து அம்மாதமென்னும் பாகுபாடுதான் திங்களின் தொடர்பு பெற்றதென்றே நன்குக விளங்கும். இக்காலத்து நமது தமிழ் நாட்டில் வழங்கிவருகின்ற இந்தச் சொல் "மாஸ"! என்பதன் தற்பவ மொழியாகும்.

அம்மொழியும் "மாஸ்" என்றிருந்தே பின் "மாஸம்" என்று ஆகியிருக்கின்றது. மாஸ் என்பதற்குத் திங்களென்பது பொருள். ஆகவே திங்களின் தொடர்பு பற்றியே மாதமென்ற பாகுபா டெழுந்ததென்பது தெளிவாகும்.

அன்றியுந் தமிழ்மொழியில் திங்கள் என்றே பழந்தமிழ்நூல்கள் மாதத்தைக் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:—

2. "திங்களு நாளும் முந்து கிளந்தன"

(தொல் - உயிர்மயங். 84)

(ஐகார ஈற்று மாதப்பெயரும் நாட்பெயரும் இகர ஈற்றுத் திங்களும்நாளும்போல இக்கும் ஆனும் பெற்று முடியும். உ-ம். சித்திரைக்குக் கொண்டான் கேட்டையாற் கொண்டான்.)

"திங்கள் முன்வரி னிக்கே சாரியை"

(ஷை ஷை 46.)

(இகர ஈற்று மாதப் பெயரின்முன் தொழினிலைக் கிளவிவரின் இக்குச்சாரியை யாம். உ-ம் ஆடிக்குச் சென்றான்.)

இவையன்றி, சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" (சிலப் - புகார் - இந்திர - 64) ஆடித்திங்கட் பேரிருட்பக்கத் தழல்சேர் குட்டத் தட்டமிஞான்று" (சில - வஞ்சி - கட்டுரை 133) எனவருஞ் சிலப்பதிகாரத் தொடர்களும் "திங்கள் வலித்த காலன் ஞானே" என்ற புறப்பாட்டின் பிரயோகம் முதலியவுமிதனை நிலைநாட்டும்.

இதன்றி மதியென்றும் மாதத்தைக்குறிப்பதுண்டு-

"யாண்டும் மதியும் நாளுங் கடிகையும்"

(சிலப் - நீர்ப்படைக் - 9.)

என்ற சிலப்பதிகாரமும்

"யாண் டிருதுமதி நாளாதி காலம்"

என்றதுபோன்ற பிற்காலத்துப் பிரயோகமும் இதனை உணர்த்தும்.

இவ்வாறு திங்கள் மதி என்னுந் தமிழ் வழக்கும், தமிழ்க்குடும்பத்தினுள்ளொன்றாகிய தெலுங்கு மொழியினுள்ளும் 'நெல' வென்பது சந்திரனையும் மாதத்தையு முணர்த்துவதும், அவ்விதமே கன்னட மொழியின்கண்ணுந் "திங்களு" என்று மாதத்தைக்குறிப்பிடுவது மிதனை வற்புறுத்தும். தெலுங்கு 'நெல' வுக்குத் தமிழ் 'நிலா'வோடு தொடர்பும் கூர்ந்து காணத்தக்கதாகும். தமிழில் நிலா - நிலவு, சந்திரன் என்று பொருள்படும்.

தமிழ்த் "திங்கள்" கூடக் கன்னடத் "திங்களு" வினின்றும் உகரங் குறைந்திருத்தலாகிய வேற்றுமையொன்றே பெற்றிருக்கின்றது. இம்மொழியனைத்துந் தமிழ்க் குடும்பத்தைச் சார்ந்தனவேயாதலின் இத்தகைய வொற்றுமை பெற்றிருப்பதும் இயற்கையே. ஆங்கில மொழியினுங்கூட மூன் (Moon) மந்த் (Month) என்றிரண்டு மொழிகளின் இயல்பும் மதியின் தொடர்புடையது மாதப்பாகுபாடென்ற உண்மையினை வலியுறுத்தும்.

ஆனால்முதன்முதல்ஆங்கிலேயர் யாண்டைப் பத்து மாதமே உடையதாகப் பகுத்து வைத்திருக்கின்றனரென்றும் கி.மு. முதல் நூற்றாண்டினரான ஜூலியஸ் ஸீஸர் அகஸ்டஸ் இவ்விருவர்களின் பெருமையைக் கருதி அவர்களின் ஞாபகார்த்தமாக ஜூலை ஆகஸ்ட் என்ற இரண்டு மாதங்களையும் சேர்த்துப் பிறகு பன்னிரண்டாகப் பகுத்தனர் என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். ஸெப்டம்பர் முதலிய மாதப் பெயர்களின் இயல்பைக் காண்போமாயின் அவ்வாராய்ச்சியாளரின் கூற்றிலும் ஓரளவு உண்மை உளதென்பது வெளியாகும். வடமொழிக்கும் ஆங்கிலமொழிக்கும் மொழிக்குரியஉறவுண்டென்றுமொழிநூலாரியம்புகின்றனர். அவர் கூறுகின்ற உறவும் இங்குத் துணைசெய்கின்றது. அதுதானென்னையெனின் ஸப்த என்பது வடமொழி ஏழு என்னும் பொருளுடையது ஸெப்டம்பர் என்ற மாதப்பெயரோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இதனை நோக்கவே, இது ஏழாவது மாதத்தின் பெயராக முதலில் அமைந்திருக்கவேண்டும். இவ்விதமே சிறிது ஆராய்வோமாயின் 'அஷ்ட' என்ற வடமொழிக்கும் அக்டோபர் என்ற மாதப்பெயர்க்குங்கூட இவ்வியல்பு அமைந்து இருத்தல் காணலாம். ஆகவே அக்டோபர் என்பதும் முதலில் எட்டாவது மாதத்தின் பெயராக அமைந்திருத்தல் வேண்டும்.

அடுத்தபடியே நவம்பர் என்பதுங்கூட 'நவ' என்னும் வடசொல்லோடு தொடர்புடையதாகக் காணப்படுதலின் முன்பு ஒன்பதாவது மாத்தின் பெயராதலே வேண்டும். இவ்விதமே டிஸம்பரும் 'தச' என்பதனோடு தொடர்புபெற்றதாகக்காணப்படுதலினால் அது பத்தாவது மாதமென்றே முன்பு வழங்கி இருத்தல் வேண்டும். ஆகவே ஜூலை ஆகஸ்ட் என்ற இரண்டும் பிற்காலத்தில் இடையே சேர்க்கப்பெற்று யாண்டுபன்னிரண்டு மாதம் அடங்கியதாக வகுத்துக்கொள்ளப்பட்ட தென்பது தெளிவாகின்றது.

இதனால் மாதக்கணக்கிடுதலில் சந்திரனுக்குத் தொடர்பு உண்டென்று ஆங்கிலேயர் உணராத காலமும் ஒன்று உண்டென்பதும் அக்காலத்திலுங்கூட நமது தமிழ்மக்கள் மதிக்கும் மாதத்திற்கு முள்ள தொடர்பை அறிந்திருந்தனர் என்பதும் நன்கு புலனாகின்றதன்றே.

இவ்வியல்பினை உணர்ந்த நம் முன்னோர் சிலர் வளர்பிறையின் முதல் நாளையே மாதத்தின் முதல் நாளென்கின்றனர். வேறுசிலர் தேய்பிறையின் முதல் நாளே மாதத்திற்காரம்பமென்கின்றனர். இத்திங்கள்தானும் நட்சத்திரந்தோறுஞ் சென்று அந்த நட்சத்திர மண்டலத்தை ஒரு முறை வட்டமிடுவனாயின் அஃதொரு மாதமென்பா ரொருசாரார். இவ்விதமே சந்திரனைக் கொண்டு கணக்கிடுதலைச் சாந்தரமானம் என்று கூறுவர் சோதிட நூலோர்.

ஆயினும் இக்காலத்து நாம் வழங்கிவருகின்ற சித்திரை வைகாசி முதலியன மேற்கூறிய பாகுபாட்டினின்றும் வேறுபட்டதாகும். ஏனெனில் மேடம் முதலிய விராசிகளிற் கதிரவனது கதிநோக்கி நாம் கணக்கிடுகின்றோம். கதிரவன் மேடத்திற் சென்றதுமுதல் இடபத்திற்கேகும்வரையிற்சித்திரையென்கின்றோம். இவ்விதமே அவன் இடபத்திலிருக்குங் காலத்தை

வைகாசி என்கின்றோம். மற்றைய மாதங்களையு மிவ்வாறே மிதுனம் முதலிய விராசிகளைக்கொண்டு கலிக்கின்றோம். நாம் சித்திரைவைகாசி என்றோமாயினுஞ் சேரநாட்டவர் அந்தந்த விராசிப்பெயராலேயே மேடம் இடபம் என்றிவ்வகைப் பெயர்களாலேயே மாதத்தைக் குறிப்பிடுகின்றனர். நமது நாட்டிலுங்கூடப் பிற்காலத்துக் கவிகளாய கம்பர் முதலாயவர்களுகம், "மேடமாதத் திதி நவமி மீன்கழை" என்பதுபோல் விராசிப்பெயரால் மாதத்தைக் குறிப்பிடுதல் காண அவ்வழக்கும் இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. இம்முறையே சூரியனைக் கொண்டு கணிக்கின்ற முறைக்குச் சௌரமானமென்று பெயர் கூறுவர். இச் சாந்திரம் சௌரம் என்ற விரண்டு முறைகளுள்ளுஞ் சாந்திரமானமே மாதக்கணிப்புமுறையில் முந்தியதாகுமென்பதை மாதமென்று பெயர் குறித்தமையே தெரிவிக்கும். இக்கருத்திற்குதவிபுரிவது திங்களென்று பொருள்படுகின்ற 'மாஸ்' மாஸமாகி மாதமென வழங்கி வருவதொன்று. தமிழ்த் 'திங்க'ளும் தெலுங்கின் 'நெல'வுங் கன்னடத்துத் 'திங்களு'வும் மாதத்தைக் குறித்துநிற்பது மற்றொன்று.

அன்றியும் சித்திரை முதலிய பெயர்களெல்லாம் நட்சத்திரங்கட்குஞ் சந்திரனுக்குமுள்ள தொடர்பே குறித்து நிற்றலுங் காண்க. எக்காலப் பகுதியிற் சித்திரை நாளன்று பூரணை கூடுகின்றதோ அஃதே சித்திரை மாதமாம். இவ்விதமே விசாகமும்பூரணையுங் கூடுமாயின் வைசாகியா மஃதே வைகாசியாயிற்றென்பர். இம்முறையே நாம் அமைதி யுணர்ந்து செல்லுமிடத்து ஆஷாடி ஆடியாயிற்றென்றும் சிராவணி ஆவணியாகியதென்றும், ஆசுவயுஜி ஐப்பசி யானதென்றும் இவ்வகையே பங்குனி வரையிலுங் காணக்கிடக்கின்றது. ஆனாலும், ஆனியொன்றே இம்முறையில் அமையாததுபோற் காண்பதாகும். அதனைக் குறித்து ஈண்டொன்றுணரற்பாற்று. அஃதியாதெனின் ஆனி மாதத்தைஜ்யேஷ்டமென்ற பெயராலழைக்கின்றனர். அதுதான் முற்கூறியவாறு திரியுமிடத்துத்தமிழில் 'கேட்டை' யாகும். இக் 'கேட்டை' தானும் கெடுதலென்னும் பொருளுணர்த்தும் இயல்புநோக்கி அம்மொழிதனை ஒரு மாதத்தின் பெயராக்காமால் ஒதுக்கினர். ஆன் அல்லது ஆனு என்ற மொழி நன்மையென்னும் பொருள் தந்து நிற்றலின் அதனை யுடையது ஆனியென்று அம்மாதத்திற்குப் பெயர்குறித்தனர்என்று அறிவுடையோர் மொழிவதை மனத்துட் கொள்ளல் வேண்டும். முற்கூறியவாறு திங்களின் தொடர்புபெற்றிருக்கும்அந்தத் தொன்மைவழக்கு நோக்கியே சாந்திரமானக்கணக்கு முந்தியதென்று உரைத்ததாகும். முதன் மறையாகிய ரிக்வேதத்திலும் "தெய்விகசக்தியினாற் பன்னிரண்டு பிறப்போடுகூடிய சந்திரனையும் அவன் உண்மையாக அறிகின்றான்" என்ற செய்தி காணப்படுகின்றது. இச்செய்திதான் யாண்டின்கண் தோன்றும் பன்னிரண்டுமாதங்களையுங் குறிப்பதோடு மாதங்களும் சந்திரனது தேய்வுவளர்ச்சிகளைக் கொண்டு கணிக்கப்படுமென்ற உண்மையை வெளியிடுகின்றது.

ஆயின் இச்சௌரமானக் கணக்குத்தான் எற்றுக்கெழுந்ததெனின், இச்சூரியனைக் குறித்தே யாண்டுக் கணக்குச் செய்துகொண்ட நம் முன்னோர் யாண்டிற் பன்னிரண்டு மாதமேயென்று வரையறுக்க வியலாவகை சிற்சிலவருடங்களிற் சந்திரன் பதின்மூன்று பிறப்புங்கொள்ளவே அக்குறைபாடு நீக்குதல்வேண்டிக் கதிரவன் மேடம் முதலிய விராசிதோறும்நிற்கும் அத்தொடர்பை யுணர்ந்து மாதத்தையும் பன்னிரண்டாகவே வகுத்துக்கொண்டனர். அதன் பிறகுஞ் சாந்திரமானத்தை முற்றிலுமொழித்திலர். பதின்மூன்றுமாதமானாலும் அதனை அதிகமாதமெனக்கழித்து மாதத்தைச் சந்திரனைக் கொண்டே கணித்துச் செல்லுகின்றவர் ஒரு சாரார். மற்றொரு சாரார் சௌரமானத்தையே முழுவகையிலும் மேற்கொண்டனர். அவர், மேடம் இடவம் என்றிவ்வகையே மாதப்பெயர் தந்து வழங்குவர். ஆனல் தற்காலத்து நாம் கொண்டிருப்பது சாந்திரம் சௌர மிரண்டுங் கலந்திருக்குமொரு முறையேயாகும்.

நமது பழந்தமிழ் மக்கள் மாதப் பாகுபாட்டினாற் காலத்தைக் குறிப்பிடுவது சிறுபான்மையே. பெரும்பாலும் பருவப் பாகுபாடுகொண்டே காலத்தைக் குறிப்பிட்டனரென்பது அகப்பொரு ளியல்புணர்ந்தார்க்கு நன்குபுலனாகும். முதன்மறையும் இவ்வியல்பே பெற்றிருக்கின்றது. அங்கு மாதப் பாகுபாட்டினும் பருவப்பாகுபாடே மிகுந்திருப்பதும் காணத்தக்கது.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

IV. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[477-வது பக்கத் தொடர்ச்சி]

7. இராகம்—ஸௌராஷ்ட்ரம்] [தாளம்—திஸ்ரத்ரிபுட சாபு.

பல்லவி

ஏமனி நேரம்மு கொந்துமு ஸ்ரீக்ருஷ்ணு—எந்துகிந்த வாது..............(ஏமனி)

சரணங்கள்

1. ஜலகமாடு வேளவலுவல தாசிமம்—மலயிம்பக லேதா..................(ஏமனி)
2. முதிதலாம்மனி திலகமுலிடி வேள—மோவிநொக்க லேதா...........(ஏமனி)
3. முதுநீவுவென்னாரகிம்சி தருணுல—மோமுன பூயலேதா..................(ஏமனி)
4. பதினெகாரி சந்தமுவச்சி பாவட—வதலிம்சி போலேதா..............(ஏமனி)
5. தோரிகிதிவனி சாடி ஜெப்பபோதே தல்லி—யுரமுன னுண்டலேதா.....(ஏமனி)

6. காமிம்சி யஜ்ஞ பத்னுலு வேகரா வேணு—காநமொனர்ப்ப லேதா.....(ஏமனி)
7. ஆநாடு பொங்கலி நீகிடி கொங்நாள்ளு—வாநனுண்ட லேதா...........(ஏமனி)
8. தானு த்யாகராஜ விநுதனி பலுகுலு—தப்பிபோதந லேதா............(ஏமனி)

பொருள்.

ஸ்ரீக்ருஷ்ணு - ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியே, ஏமனி நேரம்மு கொந்துமு - என்னவென்று ஸ்திரமாக நாங்கள் நம்பிக்கொள்வது? எந்துகு இந்த வாது - என் எங்கள்மீது இவ்வளவு வாதம்?

ஜலகமாடுவேள - ஜலக்ரீடை செய்யும்போது, வலுவலு தாசி - சேலைகளை யொளித்து வைத்துவிட்டு, மம்மு அலயிம்பகலேதா - எங்களை அலையும்படி செய்யவில்லையா?

முதிதுலரம்மனி - ஸ்திரீகளைக் கூப்பிட்டு, திலகமுலிடிவேள - திலகம் வைக்கும்போது, மோவி நொக்கலேதா - அவர்களுடைய மோவாய்களில் நீ முத்தமிடவில்லையா?

முனு - முன்பு, நீவு - நீ, வெந்ந ஆரகிம்சி - வெண்ணெயைத் தின்றுவிட்டு, தருணுல மோமுன - கோபிகாஸ்திரீகளின் முகத்தில், பூயலேதா - பூசிவிட வில்லையா?

பதினெகாரி சந்தமுவச்சி - காத்தனூர் போல வந்து, பாவட வதலிம்சி போலேதா-எங்கள் ஆடைகளைப் பிடித்திழுத்துவிட்டுப் போகவில்லையா?

தோரிகிதவ அனி சாடிஜெப்பபோதே - அகப்பட்டுக்கொண்டாயென்று (உன்மீது) கோள் சொல்லப்போன அதே காலத்தில், தல்லியுரமுன னுண்டலேதா - உன் தாயினருகிற் சென்று அவளுடலைக் கட்டிக்கொண்டு விளங்கவில்லையா?

காமிம்சி - ஆசைப்பட்டு, யஜ்ஞபத்னுலு வேகரா - யக்ஞ பத்னிகள் மிகவும் வேண்டிக்கொள்ள, வேணு காநமு ஒனர்ப்ப லேதா - வேணுகானம் செய்யவில்லையா?

ஆநாடு பொங்கலி - (மழையை விரும்பி இந்திரனைக் குறித்துச் செய்யவந்த) பொங்கலை அக்காலத்தில், நீகு இடுகொன்னுள்ளு - உனக்கிட்டபோது, (இந்திரன் கோபித்து மழை பெய்விப்பதை நிறுத்திவிட), வானனுண்ட லேதா - (உன் அருளால்) மழை பெய்யவில்லையா?

[குறிப்பு:—இக்கீர்த்தனம் ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள் செய்தருளிய நௌகா சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துக் கோபிகா ஸ்திரீகள் முறையிட்டுக் கொள்வதாக இக்கீர்த்தனம் அமைந்துள்ளது.]

ஸௌராஷ்ட்ர ராகலக்ஷணம்.

இந்தராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 15 - வது கர்த்தா ராகமான மாயாமாளவ கௌளையிற் பிறந்தது. எனினும் இது ஸம்பூர்ண ராகமே. இது பாஷாங்கராகமாகும். இதில் சதுச்ருதி தைவதமும் கைசிகிநிஷாதமும் உசிதம்போல் கலந்துபேசி; இராகச் சாயாஸ்வரங்களாக விளங்குவதனால், சிலர் இதன் ஜனகராகத்தை நிர்ணயிக்குமிடத்துச் சக்ரவாக மேளத்தையும் ஸூர்யகாந்த மேளத்தையும் இதன் ஜனகராகமென்றுகூறி மயங்குகின்றனர். எனினும் மாயாமாளவ கௌள மேளகர்த்தாவின் ஸ்வரங்களே இந்தராகத்தில் கிரஹாம்ச நியாய ஸ்வரங்களாக விளங்குகின்றன வாதலால் இதன் ஜனகராகம் அஃதாகவே யிருக்க வேண்டுமென்பது அறிவுடையோர் துணிபு. மந்த்ரதாரங்களில் இந்த ஸ்வரங்களே ராககளையைப் புலப்படுத்துகின்றன. சதுச்ருதி தைவதமும் கைசிகீநிஷாதமும் இந்தராகத்தில் மந்த்ர தாரங்களாகவாவது நியாஸங்களாகவாவது வரவில்லையென்பதை யனைவரும் கவனிக்கவேண்டும். இவ்விரண்டு ஸ்வரங்களும் கலந்துள்ள பல பிரயோகங்கள் இராகரஞ்சகமாயிருக்கின்றன வென்பதை யொருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் இக்காரணத்தினாலேயே இந்த இராகம் வேறு மேளங்களில் ஜன்யமென்று கூறிவிடுவதற்கு ஆதாரமில்லை. இது மிகவும் மங்களகரமான ராகம். சதுச்ருதி தைவத கைசிகீ நிஷாதப் பிரயோகங்கள் இந்தராகத்தில் பிராசீனர்களாற் கூடக் கையாளப்பட்டன வென்பதைப் பின்வரும் சதுர்தண்டிப் பிரகாசிகையின் சுலோகம் தெளிவுபடுத்தும்:—"ஸௌராஷ்ட்ர ராகஸ்ஸம்பூர்ண: ஸக்ரஹஸ்ஸார்வகாலிக: | பஞ்சச்ருதி தைவதஸ்துக்வசித்ஸ்தானேப்ரயுஜ்யதே ||" (ஸ்ரீவேங்கடமகி). ஆரோஹணத்தில் "ஸரிகம பமதாநிஸா" என்றும் அவரோஹணத்தில் "ஸ்தாபமகமரிஸ" என்றுங் கூடப் பிரயோகங்கள் காணப்படுகின்றன. இப்பிரயோகங்கள் மிகவும் ரஞ்சகமானவைகளே.

ஆரோஹணம்: — ஸரிகமபதநிஸ.
அவரோஹணம்— ஸ்நிதபமகரிஸ.

ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்.]

பல்லவி

; * தா நீ	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்நிதா ;	நீதா பா ;	, பா மா	தா ; பா ;	பாமா ;	கா மா ரீ ;
, * ஏ .	ம ; னி ;	நே . ர ;	கம் - மு ;	; கொந்.	து ; மு ;	ஸ்ரீ . ;	க்ருஷ்ணு ;
; * ஸா நீ	ஸா ; ரீ ;	ஸா . ரீ ;	பாமாகாமா	ரீ ; ;	; ; ; ;	; ; ;	; ; ; ;
; * எந்.	து ; கிம் ;	. த ;	வா ...	து ; ;	; ; ; ;	; ; ,	; ; ; ;

சரணங்களை யெல்லாம் இதுபோலவே பாடவேண்டும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.61.மேடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பண்டிதர்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

M 241, N28KN
N34.7.21
19918

KALANILAYAM
REG. NO. M. 2324.

சொல்லூடாட்டம் 3-க்கு.

நேரிய விடை யனுப்பியவர்:—V. மீனாக்ஷிசுந்தரம் ஐயர், திருமங்கலம்; A.M.P.A.M. முருகப்பசெட்டியார், பள்ளத்தூர்; T. L. இராமசுவாமி ஐயர், சென்னை; N. ஜகந்நாதன், சென்னை; V. இராஜாராமன்,ஆலமரத்துப்பட்டி; S. கந்தையா, பேராதனை; S. சிதம்பரம் பிள்ளை, பேராதனை; S. வேலுப் பிள்ளை, பேராதனை; K. குஞ்சரம்,சென்னை; V. சுப்ரமணிய முதலியார், சென்னை; N. K. நீலகண்டன், சென்னை; U. R. சாரங்கபாணிநாயுடு, U.N. அளகிரிசாமி நாயுடு, Dr. S. முத்துசாமி நாடார், S. M. கோதண்டராமன், U. N. வெங்கடராமன், M. சுப்ரமணியன், உடுமலைப் பேட்டை; P. S. ஷண்முகவடிவு, சென்னை; T. S. லக்ஷ்மி அம்மாள், இடைப்பாடி.

பரிசு பெற்றவர்:—U. N. அளகிரிசாமி நாயுடு, உடுமலைப்பேட்டை.

கலா நிலயத் தமிழ் வகுப்பு—திருவல்லிக்கேணி.

இந்த அக்டோபர் மாத முடிவிற்குள், சென்னை திருவல்லிக்கேணியில் நம் தமிழ் வகுப்பு ஒன்று ஆரம்பம் செய்யப்படும். அதனிற் சேர விரும்புகின்றவர் தம் பெயரையும் விலாசத்தையும் எமக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். வகுப்பு நடைபெறும் இடமும் காலமும் அவர்களுக்கு முறையே தெரிவிப்போம்.

வர்த்தமானம்

எலியை வளர்க்கும் பூனை:—ஆசியா மைனரில் ப்ருஸா என்னுமிடத்தில் ஒரு பூனை ஒரு சுண்டெலியைப் போஷித்துக் காப்பாற்றி வருகிறது. பூனைக்குச் சொந்தக்காரி ஒரு துருக்கிய மாது. பூனை தனது இரண்டு குட்டிகளுக்கும் பால் கொடுக்கும் சமயத்தில் அப் பூனைக்குட்டிகளின் ஊடே ஒரு சுண்டெலி தன் பொந்திலிருந்து வெளியே வந்து அவைகளுடன் சேர்ந்துகொண்டது. பூனை சுண்டெலியை ஒன்றும் செய்யவில்லை. பூனை எலியையும் காப்பாற்றும் நோக்கமுடையதுபோலத் தோன்றிற்று. சுண்டெலி தினந்தோறும் அதே நேரத்தில் பூனைக் குட்டிகளுடன் சேர்ந்து கொள்ளுகிறது. இது போன்று இதுவரையில் நேர்ந்ததில்லை யென்று பூனை வளர்க்கும் அநுபவசாலிகள் கூறுகிறார்கள்.

ஒரு விநோத விளம்பரம்:—பிட்ஸ் பர்க் பத்திரிகை ஒன்றில் 'கிரயத்திற்கு ஒரு வாலிபன்' என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. "அடிமை ஏலம் பழைய காலத்தியது. ஆனால் நான் என்னை இப்போது ஏலம் போட்டுக் கொள்கிறேன். அதிகத்தொகை கொடுப்பவருக்கு நான் ஒரு வருஷகாலம் அடிமையாக இருப்பேன். எனக்கு 'ஜிம்னேஷியமும்' தேகப் பயிற்சியும் நீச்சுப் பழக்கமும் அதிக முண்டு. நான் அவைகளைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயராக இருந்திருக்கிறேன். பையன்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். எனக்கு ஆபீஸ் வேலை தெரியும். எனக்கு வியாச மெழுதத் தெரியும்; கூட்டங்களை நடத்த முடியும். நான் கதைசொல்லப் பழகி யிருக்கிறேன்."

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ளு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷ்யூரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள ப்ராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!

"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"

இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)